கவனிக்க.- 2022.09.23 ஆந் திகதிய 2299 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2300 - 2022 සැප්තැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2022.09.30

2300 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1238 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | 1245 |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 1246 |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2022, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கந்தகெடிய பிரதேச சபை

*2023 ஆம் வருடத்திற்கான வரைவு வரவுசெலவு திட்ட ஆவணத்கை பரிசோதித்து பார்ப்பதற்காக பொதுமக்களுக்கு சந்தர்ப்பமொன்றை வழங்குவது தொடர்பாக செய்யப்படும் அறிவித்தல்*

*2023 ஆம் வருடத்திற்காக கந்தகெடிய பிரதேச சபையினால் சமர்ப்பிக்கப்படும் வரைவு வரவுசெலவுத் திட்ட ஆவணத்தை கந்தகெடிய பிரதேச சபைக்கு சொந்தமான கந்தகெடிய பொது நூலகத்தில் பரிசோதித்து பார்ப்பதற்காக பொதுமக்களுக்கு 2022 ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி முதல் 2022 ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்படுமென இங்ஙனம் அறியத்தருகிறேன்.*

ஆர். எம். கமல் ராஜபக்ச,
தவிசாளர்,
கந்தகெடிய பிரதேச சபை.

2022, செத்தெம்பர் 23.

09 - 363

---

## புத்தளம் பிரதேச சபை

*செயற்திட்ட பாதீட்டு ஆவணம் - 2023*

*புத்தளம் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் வரைவு ஆவணம் 2022 ஒற்றோபர் 04 ஆந் திகதியிலிருந்து 2022 ஒற்றோபர் 13 ஆந் திகதி வரை (அரச விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினம் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் பொதுமக்களின் பரிசீலனைக்காக புத்தளம் பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்படுவதோடு பிரதேச சபை பாதீடு விநியோகம் மற்றும் அமுலாக்கம் தொடர்பான சட்டத்தின் 10.2 (ஆ) ஆம் விதியின் பிரகாரம் பொதுமக்களுக்கு இத்தால் வெளியிடுகிறேன்.*

ஆர். எம். அஞ்ஜன சந்தருவன் ரத்நாயக,
தலைவர்,
புத்தளம் பிரதேச சபை.

புத்தளம் பிரதேச சபை அலுவலகம்,
மதுரங்குளி.
2022, ஒற்றோபர் 16.

09 - 364

---

## மாலிம்பட பிரதேச சபை

*அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக விளம்பரப்படுத்தல் - 2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைகளுக்கு கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் மாலிம்படை பிரதேச சபையினால் 2022 ஆம் வருடத்தின் யூன் மாதத்தின் 15 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இல. 5 : 8 இன் கீழ் சபை ஏற்றுக்கொண்ட கீழ்க் குறித்த கருத்துக்களுக்கு அக் கட்டளைச் சட்டத்தில் மேற்குறித்த உப பிரிவினால் பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் மாத்தறை நிருவாக*

*மாவட்டத்தின் பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சந்தன கே. செனவிரத்ன ஆகிய என்னால் அனுமதியைப் பெற்றுக் கொடுத்ததாக பொது மக்களுக்கு இத்தால் மூலம் அறியத்தருகின்றேன்.*

*சந்தன கே. செனவிரத்ன,*
*பிரதேச உள்ளூராட்சி உதவி*
*ஆணையாளர்.*

*உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,*
*மாத்தறை,*
*2022, யூலை 25.*

**தீர்மானம்**

*தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் மாலிம்படை பிரதேச சபை வலுப்பிரதேசத்திற்குள் (மாலிம்படை பிரதேச செயலாளர் பிரிவில்) அமைந்துள்ளதும் இலக்கம் 350 மாலிம்படை வடக்கு கிராம அலுவலர் பிரிவினதும் இலக்கம் 402 மாலிம்படை தெற்கு கிராம அலுவலர் பிரிவினதும் இலக்கம் 402ஏ, மாலிம்படை கிழக்கு கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 351பீ, கிரிமெடிமுல்ல தெற்கு கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 400ஏ, அக்குறுகொட மேற்கு கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 400பீ அக்குறுகொட தெற்கு கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 402பீ கல்பமுன கிராம அலுவலர் பிரிவினதும் இலக்கம் 403 ஏ சுல்தானாகொட தெற்கு கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 403 சுல்தானாகொட மேற்கு கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 403 பீ சுல்தானாகொட கிழக்கு கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 353 ஏ தெலிஜ்ஜவில கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 353 கடுகன்ன கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 356 தம்பெல்ல கிராம அலுவலர் பிரிவினதும் இலக்கம் 355 ஹொரகொட மேற்கு கிராம அலுவலர் பிரிவினதும் இலக்கம் 355 டி ஹொரகொட தெற்கு கிராம அலுவலர் பிரிவினதும் இலக்கம் 355 ஏ எல்கிரிய கிராம அலுவலர் பிரிவினதும், இலக்கம் 350 ஏ கடிவங்கொட கிராம அலுவலர் பிரிவுகளினாலும் உருவான எல்லைகள் :*

***வடக்கு** : இபொல் ஒலுவ சந்தி தொடக்கம் ஹேனகம கந்தஹேன கைத்தொழில் நிலையம் வரை, அவ்விடம் தொடக்கம் ஹொரகொட தெற்கு வெல்லான வீதி தொடக்கம் வெல்லான பன்சல் வரை, இபொல்ஒலுவ சந்தி தொடக்கம் ஹொரகொட வீதியின் பத்தாம் தூண் எல்கிரியவரை அவ்விடம்தொடக்கம்புலுன்தெனிய சந்தியின் சபை பெயர்ப்பலகைவரை பிரதான வீதியின் மத்திய நிலையத்திலிருந்து இரு பக்கத்திற்கும் 200m வரை.*

***கிழக்கு** : மாலிம்படை முற் சந்தி தொடக்கம் வெல்லதொட்ட பாலம் வரை, ஓகஸ்பே சந்தி தொடக்கம் அத்துடாவ பெயர் குத்தப்பட்ட கற்பாறை அமைந்த இடம் வரை. மீண்டும் ஓகஸ்பே சந்தி தொடக்கம் அத்துடாவ பெயர் குத்தப்பட்ட கற்பாறை அமைந்த இடம் வரை, மீண்டும் ஓகஸ்பே சந்தி தொடக்கம் மாத்தறை வீதி ஜயந்தி பாலம் வரை பிரதான வீதியின் மத்திய நிலையத்திலிருந்து இரு பக்கத்திற்கும் 200m வரை.*

***மேற்கு** : தெலிஜ்ஜவில சந்தி தொடக்கம் வெலிகம அக்குரெஸ்ஸ வீதியின் சமரசிங்காராமய விகாரை நிலையம் வரையும், அக்குறுகொட சந்தி தொடக்கம் நடவ்வ சந்தியின் 02 ஆம் தூண் வரையும், நடவ்வ சந்தி தொடக்கம் நடவ்வ வீதியின் 2500 ஆம் இலக்க தேயிலைக் கடை அருகாமைக்கும் பிரதான வீதியின் மத்திய நிலையத்திலிருந்து இருபக்கத்திற்கும் 200m வரை.*

***தெற்கு** : கிரிமெடிமுல்ல சந்தி தொடக்கம் அக்குறுகொட சந்தியைக் கடந்து சுல்தானாகொட சந்தியின் கற்கிணறு, அவ்விடம் தொடக்கம் கொடகம வீதியின் 02 ஆம் தூண் வரை, கல் கிணற்றின் அருகில் லபீம் விளையாட்டு மைதான வீதி தொடக்கம் குருந்து வத்த சந்தி வரையும், அக்குறுகொட சந்தி தொடக்கம் கல்பமுன வீதி நாகொட சந்தி வரையும், பிரதான வீதியின் மத்திய நிலையத்திலிருந்து இருபக்கத்திற்கும் 200m வரை.*

*09 - 403*

**அலவ்வ பிரதேச சபை**

*செயற்திட்ட பாதீட்டு ஆவணம் - 2023*

*அலவ்வ பிரதேச சபையில் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் வரைவு ஆவணம் 2022 செத்தெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து 2022 ஒற்றோபர் 11 ஆந் திகதி வரை (அரச விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினம் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் பொது மக்களின் பரிசீலனைக்காக அலவ்வ பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்படுவதோடு பிரதேச சபை பாதீடு விநியோகம் மற்றும் அமுலாக்கம் தொடர்பான சட்டத்தின் 10.2 (ஆ) ஆம் விதியின் பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் வெளியிடுகின்றேன்.*

*பத்மா வேத்தேவ,*
*தலைவர்,*
*அலவ்வ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அலவ்வ,*
*2022, செத்தெம்பர் 23.*

*09 - 407*

---

**அறனாயக பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் 24 (1) ஆம் உறுப்புரையின் கீழ்*
*மேற் கொள்ளப்படும் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (விளைவாந் தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் 24 (1) 'ஆ' உறுப்புரைக்கு ஏற்ப, செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுவதுடன் சப்பிரகமுவ மாகாண கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள CLG/ LG-5/5/ 1/19-2 எனும் இலக்கம் கொண்ட 2021.03.16 ஆந் திகதியின் கடிதத்தின் மூலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் அறனாயக பிரதேச சபைக்கு சொந்தமானவையென இத்துடன் பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*இந்த அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதைகள். யாதாயினும் ஒரு காணியின் ஊடாகவோ அந்தக் காணியின் உரிமையாளர் என உரிமைகோரும் யாராயினும் ஒரு பிரிவினர் ஆயின் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று மாதகாலத்திற்குள் அந்தக் காணிக்கு உரிய உரிமையை நிரூபிப்பதற்காக யாதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து எதிர்ப்பை வெளியிட வேண்டுமென பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரைக்கு ஏற்ப இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*கே.ஏ. நிஹால் செனவிரத்ன,*
*தலைவர்,*
*பிரதேசசபை,*
*அரனாயக.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அறனாயக,*
*2022, செத்தெம்பர் 22.*

| | | |
|---|---|---|
| *பாதையின் பெயர்* | : | *ஹபலக்காவ உடகஹவத்தையில் இருந்து ஜயசுமனாராம விகாரை வரையான பாதை* |
| *பாதையின் ஆரம்பம்* | : | *கூரகல சந்தியில் இருந்து டபல் போக்கு (மதகு) வரை உள்ள பாதை* |

| | | |
|---|---|---|
| பாதையின் முடிவு | : | ஜயசுமனாராம விகாரை |
| கிராம அலுவலர் பிரிவு | : | 44 ஏ ஹபலக்காவ பிரிவு |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம் - 262 மீற்றர் அகலம் : 08 அடி |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை வலது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| | காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர்கள் |
|---|---|---|
| 1 | திரு. யு.ஜி குணதிலக, யு. ஜி பிரேமதாஸ, யு. ஜி கருணாதாஸ மற்றும் டப்லியு. பிரேமரத்ன | உடஹவத்த |
| 2 | திரு. யு. ஜி நிமல்சிரி, யு. ஜி பிரேமசிரி மற்றும் யு. ஜி சுமனசிரி | உடஹவத்த |
| 3 | திருமதி பீ. ஜி பியசீலி | வராதென்னே ஹேன |
| 4 | திருமதி எஸ். எம் கமலாவதீ | ஹிதெனியே வத்த |
| 5 | ஜயசுமனாராம விகாரை | வராதென்னே ஹேன |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை இடது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| | காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர்கள் |
|---|---|---|
| 1 | திரு. யு.ஜி நிமல்சிரி | உடஹவத்த |
| 2 | திரு. யு. ஜி நிமல்சிரி, யு. ஜி பிரேமசிரி மற்றும் யு. ஜி சுமனசிரி | உடஹவத்த |
| 3 | திருமதி டப்லியு. ஜி சுவர்ணா குணதிலக | வராதென்னே ஹேன |
| 4 | திரு. டப்லியு. ஜி கருணாரத்ன | வராதென்னே ஹேன |
| 5 | திரு. ஏ. டி. பிரியந்த | வராதென்னே ஹேன (இக்காணியின் எல்லைகள்மாத்திரம் அளவை எடுக்கப்பட்டுள்ளது) |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டி. கே. ஹேரத் அவர்களின் 2021.03.06 ஆந் திகதி அளக்கப்பட்ட திட்டப் படவரைபு 904/2021 ஆம் இலக்க காணிப் படவரைபுக்கு ஏற்பவாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கேவிலிபிடிய எகொடஹவத்த பாதை |
| பாதையின் ஆரம்பம் | : | கெவிலிபிடியிலிருந்து பொல் அம்பேகொட வரையான பாதை |
| பாதையின் முடிவு | : | திரு. எஸ். பீ. அநுருத்த குமார திஸாநாயக, திரு. எஸ். பீ. ஜயசேன, திருமதி எஸ்.பீ. குணவதீ, திருமதி. எஸ். பீ ரஞ்ஜனி சுவர்ணவதா மற்றும் திரு. எஸ். பீ. காமினி விஜேசிங்ஹ என்பவர்கள் உரிமைகோரும் எகொடஹவத்த காணி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 45 ஏ கெவிலிபிட்டிய |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம் - 102 மீற்றர் அகலம் : 08 அடி |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை வலது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1 திரு. எஸ். பீ. அநுருத்த குமார திஸாநாயக, எஸ். பீ. ஜயசேன, திருமதி எஸ். பீ. குணவதி, திருமதி எஸ்.பீ. ரஞ்ஜனி சுவர்ணலதா, திரு. எஸ்.பீ. காமினி விஜேசிங்ஹ | எகொடஹவத்த |
| 2 திரு. எஸ்.பீ. குலவங்ஷ தயாரத்ன | எகொடஹவத்த |
| 3 திரு. எஸ். பீ. அநுருத்த குமார திஸாநாயக, எஸ். பீ. ஜயசேன, திருமதி எஸ்.பீ. குணவதி, திருமதி எஸ்.பீ. ரஞ்ஜனி சுவர்ணலதா, திரு. எஸ்.பீ. காமினி விஜேசிங்ஹ | எகொடஹவத்த |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை இடது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1 திரு. எஸ். பீ. அநுருத்த குமார திஸாநாயக, திரு. எஸ்.பீ. ஜயசேன, திருமதி எஸ். பீ. குணவதி, திருமதி எஸ். பீ. ரஞ்ஜனி சுவர்ணலதா, திரு. எஸ்.பீ. காமினி விஜேசிங்ஹ | எகொடஹவத்த |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டி. கே. ஹேரத் அவர்களின் 2021.02.21 ஆந் திகதி அளக்கப்பட்ட திட்டப் படவரைபு 903/2021 ஆம் இலக்க காணிப் படவரைபுக்கு ஏற்பவாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கொடிகமுவ தங்கொட்டுவ வத்த பாதை |
| பாதையின் ஆரம்பம் | : | ஆரனாயக மாவனெல்ல பிரதான பாதை |
| பாதையின் முடிவு | : | திரு.டி.பீ. பிரேமலால் ரத்நாயக அவர்கள் உரிமைகோரும் ஹிட்டினாவத்த காணி |
| கிராம அதிகாரி பிரிவு | : | 46 ஏ கொடிகமுவ |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம் - 168 மீற்றர் அகலம் : 08 அடி |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை வலது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1 திருமதி டி. பிரேமா செனெவிரத்ன | பண்டவகும்புற |
| 2 திரு. பீ. எஸ்.பீ. செனெவிரத்ன | பண்டவகும்புற |
| 3 திரு. ஜே. என் ஜயமங்கல | ஹிட்டினாவத்த |
| 4 திருமதி பி. பீமாலனீ | ஹிட்டினாவத்த |
| 5 திரு. டி.பீ. பிரேமலால் ரத்நாயக | ஹிட்டினாவத்த |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டி. கே. ஹேரத் அவர்களின் 2020.12.05 ஆந் திகதி அளக்கப்பட்ட திட்டப் படவரைபு 899/2021 ஆம் இலக்க காணிப் படவரைபுக்கு ஏற்பவாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | உஸ்ஸாபிட்டிய வீபிஸ்ஸ ஹேன பாதை |
| பாதையின் ஆரம்பம் | : | தாஸ்வத்த பாதை |
| பாதையின் முடிவு | : | திருமதி பீ.பீ. நதிகாசமன்தி விமலசிரி அவர்கள் உரிமைகோரும் வீபிஸ்ஸ ஹேனகாணியின் ஆரம்பம் |
| கிராம அதிகாரி பிரிவு | : | 17 உஸ்ஸாபிட்டிய |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம் - 62 மீற்றர் அகலம் : 08 அடி |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை வலது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| | காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|
| 1 | திரு. ஜி. ஜி. விமலசிரி | தங்கஹமடித்த |
| 2 | திருமதி ஏ. ஜி லீலாவதி | தங்கஹமடித்த |
| 3 | திரு. கே.ஜி.ஏ.கே. கோதாகொட | வீபிஸ்ஸ ஹேன |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை வலது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| | காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|
| 1 | திரு. எம்.ஜி. பத்மசிரி விக்ரமநாயக | தங்கஹமடித்த (இந்தக்காணியின் எல்லைகள் மாத்திரம் அளவை எடுக்கப்பட்டுள்ளது) |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டி. கே. ஹேரத் அவர்களின் 2021.05.18 ஆந் திகதி அளக்கப்பட்ட திட்டப் படவரைபு 907/2021 ஆம் இலக்க காணிப் படவரைபுக்கு ஏற்பவாகும்.

09 - 413

---

## வென்னப்புவ பிரதேச சபை

வரவு செலவுத்திட்ட வரைவு - 2023

வென்னப்புவ பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான வரைவு வரவுசெலவுத்திட்ட ஆவணம் 2022 ஒற்றோபர் மாதம் 03 ஆம் திகதி முதல் 2022 ஒற்றோபர் 12 ஆம் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினங்கள் தவிர அலுவலக

நேரங்களில் வென்னப்புவ பிரதேச அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனை பொருட்டு வைக்கப்பட்டுள்ளது என்பதனை பிரதேச சபை வரவுசெலவுத்திட்டத் தயாரித்தல் மற்றும் வலுப்படுத்தல் விதிகளின் 10.2 (ஆ) ஆம் விதி பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கே. வி. சுசந்த பெரேரா,
தலைவர்,
வென்னப்புவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வென்னப்புவ,
2022, செத்தெம்பர் 30.

09 - 421

---

**சிலாபம் நகர சபை**

வரவு செலவுத் திட்டவரைவு - 2023

சிலாபம் நகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான வரைவு வரவுசெலவுத்திட்ட ஆவணம் 2022 ஒற்றோபர் மாதம் 03 ஆம் திகதி முதல் 2022 ஒற்றோபர் 12 ஆம் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினங்கள் தவிர) அலுவலக நேரங்களில் சிலாபம் நகர சபை அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனை பொருட்டு வைக்கப்பட்டுள்ளது என்பதனை நகர சபை வரவுசெலவுத்திட்டத் தயாரித்தல் மற்றும் வலுப்படுத்தல் விதிகளின் 10.2 (ஆ) ஆம் விதி பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

டப். எம். ஏ. துஷான் சத்துரங்க,
தலைவர்,
சிலாபம் நகர சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சிலாபம்,
2022, செத்தெம்பர் 30.

09 - 425

---

**குளியாப்பிட்டிய பிரதேச சபை**

குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கையை பரீட்சித்துப் பார்த்தல் சார்பாக பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்திற்கு அமைவாக மற்றும் 2020 வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் விதிகளின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கையை 2022.09.30 முதல் 2022.10.11 திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் சுகாதார வழிகாட்டல்களுக்கு உட்பட்டு அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களுக்கு பரீட்சித்துப் பார்ப்பதற்காக தலைமையக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

ஈ. எம். விஜெயசிறி ஏகநாயக,
தலைவர்,
குளியாப்பிட்டிய பிரதேச சபை.

09 - 427

# ˙வரவு செலவுத் திரட்டுகள்

**நவகத்தேகம பிரதேச சபை**

வரவு மற்றும் செலவுபற்றிய அறிக்கை நிதி வெளியீட்டை பிரசித்தபடுத்தல்

*1988 ஆம் ஆண்டு பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) சட்டகோவை 216 ஏற்பாடுகளுக்கு அமைய கீழ் காணப்படும் உப ஆவணங்கள் குறிப்பிடும் கணக்காய்வு செய்யப்பட்ட நவகத்தேகம பிரதேச சபையின் 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதி செயற்பாட்டறிக்கை மற்றும் 2021.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கையினை பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக வெளியிடப்படுகிறது.*

*உப ஆவணம் I - 2021.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கை*

*உப ஆவணம் II - 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதி செயற்பாட்டறிக்கை*

உப ஆவணம் I

**நவகத்தேகம பிரதேச சபை**

*2021.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கை*

| | 2020.12.31 | 2021.12.31 |
|---|---|---|
| சொத்துக்கள் | ரூ. ச. | ரூ. ச. |
| **நடைமுறை அல்லாச் சொத்துக்கள்** | | |
| நிலையான சொத்துக்கள் மற்றும் தளபாடங்கள் | 121,070,485.94 | 152,422,071.79 |
| **நடைமுறைச் சொத்து** | | |
| கையிருப்பு | 2,054,361.63 | 3,226.490.46 |
| ஊழியர் கடன்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 4,615,254.32 | 4,502,911.66 |
| பெற வேண்டிய கணக்குகள் | 35,261,996.44 | 37,095,332.84 |
| முதலீடுகள் | 393,617.50 | 454,677.45 |
| காசும் காசிற்கு சமமானவைகளும் | 4,649,386.04 | 5,030,320.41 |
| மொத்தச் சொத்துக்கள் | 168,045,101.87 | 202,731,804.61 |
| பொறுப்புக்கள் | | |
| நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள் | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 33,606,229.81 | 34,224,970.98 |
| உரிமை | 134,438,872.06 | 168,506,833.63 |
| மொத்த உரிமையும் பொறுப்புக்களும் | 165,496,418.52 | 202,731,804.61 |

உப ஆவணம் II

**நவகத்தேகம பிரதேச சபை**

*2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதி செயற்பாட்டறிக்கை*

| | 2020.12.31 | 2021.12.31 |
|---|---|---|
| **சொயற்பாட்டுவருமானம்** | ரூ. ச. | ரூ. ச. |
| அரசின் பங்களிப்பு - மீண்டெழக்கூடிய | 28,230,413.34 | 32,698,935.51 |
| வேறுவருமானங்கள் | 9,501,705.71 | 10,611,629.66 |
| **மொத்த செயற்பாட்டுவருமானம்** | 37,732,119.05 | 43,310,565.17 |
| **நடைமுறைச் செலவு** | | |
| மீண்டெழும் செலவுகள் | 37,951,997.58 | 41,382,953.02 |
| **மொத்த நடைமுறைச் செலவுகள்** | **37,951,997.58** | **41,382,953.02** |
| குறித்த ஆண்டிற்கான பெறுமதி மிகை/(பற்றாக்கறை) | (219,878.53) | 1,927,612.15 |
| மூலதனவருவாய் | (29,750,726.41) | 39,905,063.13 |
| மூலதனச் செலவு | 31,209,686.81 | 38,966,438.76 |
| **குறித்த ஆண்டிற்கான தேறிய மிகை** | **(1,678,838.93)** | **2,866,236.52** |

*09 - 412*

---

## நானாவித அறிவித்தல்கள்

**அலவ்வ பிரதேச சபை**

ஏக்கர் வரி விதித்தல் - 2023

அலவ்வ பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டில் யூலை மாதம் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் போது 05-01 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொதுமக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

2023 ஆண்டிற்காக விதிக்கப்பட்ட ஏக்கர் வரி மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவடைகின்ற காலாண்டுகளுக்கு முன் சமமான நான்கு பகுதிகளாக பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டிற்கான மொத்த ஏக்கர் வரி 2023 ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டால் அந்த மொத்த ஏக்கர் அந்த மொத்த ஏக்கர வரி அளவில் நூற்றுக்கு பத்து (10%) கழிவும்,

ஒவ்வொரு காலாண்டிற்கும் உரிய ஏக்கர் வரி அந்த ஒவ்வொரு காலாண்டில் முதலாம் மாதத்தில் இறுதி திகதிக்கு முன் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டால் நூற்றிற்கு ஐந்து (5%) கழிவும் வழங்கப்படும்.

பத்மா வேத்தேவ,
தலைவர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2022, ஒகத்து 10.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தில் 146 ஆம் உப பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் அலவ்வ பிரிதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 2022 ஆம் ஆண்டு அதிகாரமாக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டிற்காக ஏற்றுக் கொள்வதற்கும், உரியச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ளதும் மேற் கூறப்பட்ட சட்டத்தில் 135 ஆம் பிரிவின் கீழ் ஏக்கர் வரியில் இருந்து விடுவிக்காததும், நிரந்தரமாக அல்லது அன்றாடம் விவசாயம் செய்கின்றதும்,

(அ) ஹெக்டயார் ஐந்து அல்லது அதற்கு அதிகமான எல்லா காணியின் எல்லா ஹெக்டயாருக்காக 2022 ஆம் ஆண்டிற்காக பத்து ரூபா (ரூ.10.00) வண்ணம் வருடாந்தம் விதிக்கப்பட்டு அறவிடுவதற்கும்.

(ஆ) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 134 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவின் இடைநிலை சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்ற விடய பொறுப்புடைய கௌரவ அமைச்சரினால் அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவை விஷேட பிரிவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (ஆ) ஆம் பகுதியின் 1989.03.10 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதனால், ஹெக்டயார் ஒன்றிற்கு அதிக அதாவது ஹெக்டயார் ஐந்திற்கு குறைந்த எல்லா காணிகளுக்கும் 2023 ஆம் ஆண்டிற்காக ஐம்பது ரூபா (ரூ.50.00) வண்ணம் வருடாந்த ஏக்கர் வரி விதித்து அறவிடுவதற்கும்,

(இ) பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவில் (6) ஆம் உப பிரிவின் சட்டத்திட்டத்தின் கீழ் உரிய வருடத்தில் மார்ச் 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதிளுக்கு முன் சமமான நான்கு பகுதிகளாக செலுத்துவதற்கு அதிகாரம் உள்ளது என்று அலவ்வ பிரதேச சபை தீர்மானிக்கிறது.

09 - 336/1

---

**அலவ்வ பிரதேச சபை**

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2023

அலவ்வ பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டில் யூலை மாதம் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் போது 05-02 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொதுமக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட மதிப்பீட்டு வரி மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவடைகின்ற காலாண்டுகளுக்கு முன் சமமான நான்கு பகுதிகளாக பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டிற்கான மொத்த மதிப்பீட்டு வரி 2023 ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டால் அந்த மொத்த மதிப்பீட்டு வரி அளவில்

நூற்றுக்கு பத்து (10%) கழிவும், ஒவ்வொரு காலாண்டிற்கும் உரிய மதிப்பீட்டு வரி அந்த ஒவ்வொரு காலாண்டில் முதலாம் மாதத்தில் இறுதி திகதிக்கு முன் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டால் நூற்றிற்கு பத்து (5%) கழிவும் வழங்கப்படும்.

பத்மா வேத்தேவ,
தலைவர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2022, ஓகத்து 10.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தில் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் அலவ்வ பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1659 ஆம் இலக்க 2010.06.18 ஆந் திகதியுடைய வர்த்தமானியின் கீழ் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதும் பிரதேசத்தினுள் அமைந்துள்ள எல்லா வீடுகளில், கட்டிடங்களில், காணிகளில் வீட்டுத் தோட்டங்களில் ஆண்டு பெறுமதியில் 2009 ஆம் ஆண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட மதிப்பீட்டின் படி 2023 ஆம் ஆண்டு மதிப்பீடாக ஏற்றுக் கொள்வதற்கும்,

உரிய சட்டத்தின் 134(1) ஆம் உப பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அந்த சொத்துக்களின் மீது மேற்கூறப்பட்ட மதிப்பீட்டிற்காக வருடாந்த பெறுமதியில் நூற்றிற்கு நான்கு வீதம் (4%) ஆண்டு வரிபணம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும்,

இன்னும் 2023 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு ஒவ்வொரு காலாண்டிற்காகவும் அதன் முன் நிலையில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன், உரியவாறு விதிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரிக்கு சமமாக நான்கு தவணைகளில் அலவ்வ பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்த வேண்டும் என்றும்,

2023 ஆம் ஆண்டில் சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்துவதாயின் வருட வரிப்பணத்தில் நூற்றிற்கு பத்து வீதம் (10%) கழிவும், உரிய அட்டவணையில் ஒவ்வொன்றின் முன்னிலையில் மூன்றாவது நிரலில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன் உரிய வரிப்பணத் தொகையினை அலவ்வ பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்துவதாயின் ஒரு காலாண்டிற்கு உரிய தொகையில் 5% கழிவினை அலவ்வ பிரதேச சபை வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன்.

### அட்டவணை

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்காக உரிமை பெறும் கடைசி திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 2023.03.31 | 2023.01.31 |
| இரண்டாவது காலாண்டு | 2023.06.30 | 2023.04.30 |
| மூன்றாவது காலாண்டு | 2023.09.30 | 2023.07.31 |
| நான்காவது காலாண்டு | 2023.12.31 | 2023.10.31 |

09 - 336/2

## அலவ்வ பிரதேச சபை

*வாகனம் மற்றும் மிருகங்களுக்கான வரி விதித்தல் - 2023*

*அலவ்வ பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டில் யூலை மாதம் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தின் போது 05-03 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொதுமக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*அதன்படி, அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் வரிக்கு உட்படுகின்ற ஏதாவதொரு வாகனம் அல்லது மிருகங்களை வைத்திருக்கும் எல்லோரினாலும், உரிய வாகனத்தை அல்லது மிருகத்தினை தமது பொறுப்பில் வைத்திருக்கும் திகதி தொடக்கம் 30 நாட்கள் பூர்த்தியடைந்தவுடன் 2023 ஆம் ஆண்டிற்காக இந்த வரி அலவ்வ பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

பத்மா வேத்தேவ,
தலைவர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2022, ஓகத்து 10.

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 147 உடன் வாசிக்கப்பட வேண்டிய அந்த சட்டத்தின் 148 ஆம் பிரிவும் நான்காம் உப அட்டவணையில் சட்டதிட்டங்களில் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் 2023 ஆம் ஆண்டில் கீழ்க் காணப்படும் அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு வாகனம் அல்லது மிருகம் தன்னிடத்தில் வைத்திருக்கும் எல்லோரும் இந்த II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ளவாறு வரி 2022 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு அலவ்வ பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்றது.*

### அட்டவணை

| | | நிரல் I | நிரல் II |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 1. | (i) | மோட்டார் வாகனம், மோட்டார் ரைசிகிள், மோட்டார் லொரி, மோட்டார் சைக்கிள் மாட்டு வண்டி, ஜின் ரிக்ஷோ, மிதி வண்டி, அல்லது ரைசிகள் அல்லாத எல்லா வாகனத்திற்காகவும் | 25.00 |
| | (ii) | எல்லா சைக்கிள்கள் அல்லது ரைசிகள்கள் அல்லது சைக்கிள் கார் அல்லது சில்லு வண்டிக்காக | |
| | | (அ) வியாபார அலுவலுக்காக உபயோகிப்பதாயின் | 18.00 |
| | | (ஆ) வியாபார அலுவலுக்கல்லாது உபயோகிப்பதாயின் | 4.00 |
| | (iii) | எல்லா வண்டிகளுக்காகவும் | 20.00 |
| | (iv) | எல்லா தள்ளு வண்டிகளுக்காகவும் | 10.00 |
| | (v) | எல்லா ரிக்ஷோவுக்காகவும் | 7.50 |
| | (vi) | எல்லா குதிரைகள், போனியோ அல்லது செம்மறி ஆடுகளுக்காக | 15.00 |
| | (vii) | எல்லா யானைகளுக்கும் | 50.00 |

2. விட்டம் 26 அங்குலத்திற்கு பார்கிலும் குறைந்த சில்லு உள்ள சிறுவர் வாகனம், வில் பரோ, இன்னும் தனிப்பட்ட இடங்களில் மாத்திரம் வியாபாரத்திற்காக மாத்திரம் உபயோகிக்கும் கை வண்டி மற்றும் வியாபார அலுவலுக்காக உபயோகிக்கப்படாத கை வண்டி ஆகியன மேற்கூறப்பட்ட கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படும்.

09 - 336/3

## அலவ்வ பிரதேச சபை

*வாகனங்களை தரித்து வைப்பதற்காக கட்டணம் அறவிடல் - 2023*

*அலவ்வ பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டில் யூலை மாதம் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தின் போது 05-05 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொதுமக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*2023 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் கட்டணம் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*பத்மா வேத்தேவ,*
*தலைவர்,*
*அலவ்வ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அலவ்வ,*
*2022, ஓகத்து 10.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் 122 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 126 ஆம் பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 2010.07.16 ஆந் திகதி இலக்கம் 1663 ஆம் வர்த்தமானியில், வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய கௌரவ அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டு அறிவித்தல் விடுக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட துணை விதியினை அலவ்வ பிரதேச சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 2011.07.22 ஆம் இலக்கம் 1716 வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அத்துணை விதியின் படி பிரதேச சபை எல்லையினுள் வாகனம் தரித்தல் சம்பந்தமாக கீழ் காணப்படும் உப அட்டவணையில் உள்ள கட்டணம் 2023 ஆம் ஆண்டிற்காக அறவிடுவதற்கும், உரிய கட்டணம் செலுத்த வேண்டியவரினால் 2023 ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அலவ்வை பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கின்றேன்.*

### அட்டவணை

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | வாகனம் பதிவு செய்யும் கட்டணம் | 100.00 |
| 2. | கார், வேன், முச்சக்கர வண்டிக்காக மாதாந்தக் கட்டணம் | 100.00 |
| 3. | கனரக வாகனத்திற்காக மாதாந்தம் | 125.00 |
| 4. | ரெக்டர், கை ரெக்டர் ஆகியவற்றிற்காக மாதாந்தக் கட்டணம். | 75.00 |

*09-336/4*

---

## அலவ்வ பிரதேச சபை

*காணி விற்பனைக்காக வரி அறவிடல் - 2023*

*அலவ்வ பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டில் யூலை மாதம் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தின் போது 05-06 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொதுமக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*2023 ஆண் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட வரி மற்றும் கட்டணம், காணி ஏலம் விடுகின்ற ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது அவரது முகவர் ஒருவரினால் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

பத்மா வேத்தேவ,
*தலைவர்,*
*அலவ்வ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அலவ்வ,*
*2022, ஒகத்து 10.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154 ஆம் பிரிவின் படி அலவ்வ பிரதேச சபையின் எல்லையினுள் அமைந்துள்ள ஏதாவதொரு காணி ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது உதவி முகவர் ஒருவரினால் பிரசித்த ஏலத்தில் அல்லது ஏதாவதொரு வகையில் விற்பனை செய்கின்ற சந்தர்ப்பத்தில் அக் காணி விற்பனையினால் பெற்ற தொகையில் நூற்றிற்கு ஒரு (1%) வீதத்தில் சமமான வரியும், இலக்கம் 1882/22 மற்றும் 2014.10.01 ஆந் திகதியுடைய காணி துண்டு இடப்படும் ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதியில் 15 ஆம் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டம் அல்லது உப பிரிப்பை அனுமதித்துக் கொள்வதற்காக பரிசீலனைக் கட்டணமாக கீழ் காணப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2023 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிட வேண்டும் என்றும், அதன் வரியும் கட்டணமும் ஒப்பந்த விற்பனையாளருக்கு அல்லது ஏலதாரருக்கு தரகருக்கு அல்லது அவரின் சேவையாளருக்கு அல்லது அவரின் உதவி முகவரினால் அலவ்வ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் அலவ்வ பிரதேச சபை தீர்மானிக்கின்றது. (எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகார பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் காணி துண்டிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் போது நகர அபிவிருத்தி மற்றும் வீடு அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2235/54 - 2021.07.08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டம் மற்றும் அபிவிருத்தி கட்டளை /விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்பட வேண்டும்.)*

**அட்டவணை**

| *காணியின் அளவு* | *அபிவிருத்தி திட்டம் அனுமதிப் பதற்காக கட்டணம்* | *உபபிரிவை அனுமதிப் பதற்காக கட்டணம்* |
|---|---|---|
| ஹெக்டயார் 01 க்கு குறைந்த | ரூ. 500.00 | ரூ. 500.00 |
| ஹெக்டயார் 01 க்கு மேற்பட்ட 02 வரை | ரூ. 700.00 | ரூ. 700.00 |
| ஹெக்டயார் 02 க்கு மேற்பட்ட 04 வரை | ரூ. 1000.00 | ரூ. 1000.00 |
| ஹெக்டயார் 04 க்கு மேற்பட்ட | ரூ. 1250.00 | ரூ. 1250.00 |

*09 - 336/5*

---

**அலவ்வ பிரதேச சபை**

விளம்பர அறிவித்தல்/கண்கூடான சுற்றாடல் பற்றிய
துணை விதிக்கு ஏற்ப கட்டணம் அறவிடல் - 2023

*அலவ்வ பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டில் யூலை மாதம் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தின் போது 05-07 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொதுமக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

2023 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட கட்டணம், விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்கு கருதுகின்ற திகதிக்கு பின்னுள்ள ஏழு நாட்களுக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

பத்மா வேத்தேவ,
தலைவர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2022, ஓகத்து 10.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (அ) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/7 கான அதி விஷேட வர்த்தமானி மூலம் 1952 ஆம் ஆண்டு இலக்கம் 6 கான உள்ளூராட்சி நிறுவனம் (ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி, வீடமைப்பு கௌரவ அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டு அறிவித்தலுக்குற்படுத்தப்பட்ட ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதி அலவ்வ பிரதேச சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1998.08.28 ஆந் திகதி இலக்கம் 1043 வர்த்தமானியின் IV(ஆ) பகுதியில் அறிவித்தல் விடுக்கப்பட்ட அந்த துணை விதியில் 39 ஆம் இடைநிலைச் சட்டமாகிய பிரச்சார அறிவித்தல் /பார்வைக்குட்பட்ட சுற்றாடல் பற்றிய துணை விதிப்படி அலவ்வ பிரதேச சபை எல்லையினுள் ஏதாவதொரு வகையில், பாதைக்கு, கால்வாயிற்கு, குளத்திற்கு அல்லது வானத்திற்கு தெரியும் வண்ணம் அறிவித்தலை காட்சிக்கு வைப்பதற்காக கீழ் காணப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம்

2022 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு வேண்டியவர்கள் அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு கருதுகின்ற தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்பதாக அலவ்வ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் அலவ்வ பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

(எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகார பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் விளம்பர அறிவித்தலுக்காக அங்கீகாரம் வழங்கும் போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட

2235/54 ஆம் இலக்க 2021.07.08, இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டம் மற்றும் அபிவிருத்தி கட்டளை /விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்பட வேண்டும்.)

**அட்டவணை**

| விளம்பர அறிவித்தல் விபரம் | அனுமதிப்பத்திர கட்டணம் |
|---|---|
| 01. வியாபார விளம்பர அறிவித்தல், விளம்பர பலகை காட்சிக்கு வைப்பதற்காக ஏதாவதொரு இடத்தில் பொருத்தும் போது ஒரு சதுர அடியிற்கு வருடத்திற்கு | ரூ. 150.00 |
| 02. எவரேனுமாளினால் தூக்கிச் செல்கின்ற அல்லது பயணம் செய்கின்ற வாகனத்திற்கு பொருத்தப்பட்டுள்ள அல்லது பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அல்லது எவர் ஒருவரினால் பொருத்தப்படுகின்ற பிரசார அறிவித்தல் அல்லது பதாகைக்காக ஒரு சதுர அடியிற்கு - ஒரு மாதத்திற்கு | ரூ.50.00 |
| 03. காணி ஏல விற்பனை பற்றிய விளம்பர அறிவித்தலுக்காக ஒரு சதுர அடியிற்கு - ஒரு மாதத்திற்கு | ரூ. 100.00 |

09-336/6

## அலவ்வ பிரதேச சபை

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றுச் சூழல்*
*சட்டத்தின் கீழ் உரிமப்பத்திரக் கட்டணம் விதித்தல் - 2023*

*அலவ்வ பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டில் யூலை மாதம் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தின் போது 05-08 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொதுமக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட அவ் உரிமப்பத்திரக் கட்டணம், பரிசீலனைக் கட்டணம், சுற்றாடல் உரிமப்பத்திரம் வழங்குவதற்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

பத்மா வேத்தேவ,
*தலைவர்,*
*அலவ்வ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அலவ்வ,*
*2022, ஒகத்து 10.*

### தீர்மானம்

*வடமேல் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண சுற்றாடல் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப் படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் செய்யப்படுகின்ற ஏதாவதொரு வியாபாரத்திற்காக கீழ காணப்படும் உப அட்டவணையில் உள்ளவாறு கட்டணமும் பரிசீலனைக் கட்டணம் 2023 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடுவதாகவும், உரிய கட்டணம் உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு முன் அலவ்வ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கின்றது.*

### அட்டவணை

| | | |
|---|---|---|
| 01. | உரியவாறு அமைக்கப்பட்ட கேள்விக் கோரலுக்கான விண்ணப்பப் படிவ கட்டணம் | ரூ. 100.00 |
| | அதிகாரப் பத்திரம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவ கட்டணம் | ரூ. 50.00 |
| | விண்ணப்பப் படிவ கட்டணம் | ரூ.1250.00 |
| 02. | சுற்று சூழல் அதிகாரப்பத்திர பரிசீலனை கட்டணம் | |

| ஆரம்ப முதலீடு | ரூ. ச. |
|---|---|
| ரூ. 1,00,000.00 வரை | 250.00 |
| ரூ. 1,00,001.00 - ரூ. 2,00,000.00 வரை | 500.00 |
| ரூ. 2,00,001.00 - ரூ. 5,00,000.00 வரை | 1250.00 |
| ரூ. 5,00,001.00 - ரூ. 1,000,000.00 வரை | 2500.00 |
| ரூ. 1,000,001.00 மேல் | 5000.00 |

*09 - 336/7*

---

## அலவ்வ பிரதேச சபை

*சான்றிதழ், சேவைகள் மற்றும் வேறு கட்டணம் விதித்தல் - 2023*

*அலவ்வ பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் போது 05-09 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ்க் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொதுமக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

2023 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு சபையினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் மற்றும் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக விதிக்கப்பட்ட உரிய கட்டணம் அச் சேவைகள் அல்லது சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

பத்மா வேத்தேவ,
தலைவர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2022, ஒகத்து 10.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் கீழ்க் காணப்படும் அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் அல்லது சேவைகள் பெற்றுக் கொடுப்பதற்காக அந்த அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2023 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் என்று, உரிய வேலையை அல்லது சான்றிதழை பெற்றுக் கொள்ளும் எவர் ஒருவரினால் அந்த சேவையை அல்லது சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு முன் அக் கட்டணத்தினை அலவ்வ பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும் என்று தீர்மானிக்கின்றது. (எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகார பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் கட்டிட திட்டத்தை அங்கீகரிக்கும் போது வழங்கப்படுகின்ற சான்றிதழ் சேவைகளுக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடு அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டம் மற்றும் அபிவிருத்தி கட்டளை /விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்பட வேண்டும்.)

**அட்டவணை**

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| 1. | வீதி ரேகை மற்றும் மீள் பெறாத சான்றிதழ், கட்டிடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட உரிமையுள்ள சான்றிதழுக்காக | ரூ.600.00 |
| | அதற்கான வைப்புத் தொகை | ரூ.100.00 |
| 2. | சொத்து உரிமையை மாற்றுதல், வரிப்பணம் அட்டவணையில் பெயரை மாற்றுதல் | ரூ.250.00 |
| 3. | கட்டிடம் முறையானது பற்றிய சான்றிதழ் | ரூ.1000.00 |
| 4. | கட்டிட விண்ணப்பப்படிவங்களின் உரிய காலத்தை நீடிப்பதற்கு ஒரு வருடத்திற்காக | ரூ.1000.00 |
| 5. | கட்டிட விண்ணப்பத்திற்காக | ரூ.500.00 |
| 6. | கட்டிட விண்ணப்பத்தை அனுமதிக்கும் போது கட்டணம் (முன்கூட்டிய கட்டணம்) | |

| கட்டத்தின் அளவு (சதுர அடி) | சதுர அடிக்கான கட்டணம் ரூ.ச. குடியிருப்பு | வியாபார |
|---|---|---|
| 500 இற்கு குறைந்த | 1.00 | 1.50 |
| 500 - 1000 | 1.50 | 2.00 |
| 1001 - 2000 | 2.00 | 2.50 |
| 2001 - 3000 | 2.50 | 3.00 |
| 3001 - 5000 | 3.00 | 3.50 |
| 5001 - 10000 | 3.50 | 4.00 |
| 10000 இற்கு மேற்பட்ட | 5.00 | 6.00 |
| 5 அடி உயரத்திற்கு குறைந்த மதிலுக்கு ( 1 அடி நீளத்திற்காக) | 10.00 | 10.00 |
| 5 அடி உயரத்திற்கு மேற்பட்ட மதிலுக்கு ( 1 அடி நீளத்திற்காக) | 15.00 | 15.00 |
| மதில் ஒன்றினை கட்டமைப்பதற்கு ( 1 அடி நீளத்திற்காக) | 10.00 | 10.00 |
| சட்டரீதியாகக் கூடிய அனுமதியற்ற கட்டமைப்புக்கள் சட்டரீதியாக்குவதற்கான கட்டணம் | | |

| | | சதுர அடியிற்கான கட்டணம் ரூ.ச. | |
|---|---|---|---|
| | | குடியிருப்பு | வியாபார |
| | (மேலே குறிப்பிடப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அறவிடப்படும் கட்டணம்) | | |
| (அ) | அத்திவாரத்தின் கடைசி வரை கட்டமைக்கப்பட்டிருந்த போது | 1.50 | 2.00 |
| (ஆ) | கட்டமைப்பு ஒரு பகுதி முடிவடைந்திருந்த போது | 2.00 | 2.50 |
| (இ) | கட்டமைப்பு முடிவடைந்திருந்த போது | 3.00 | 3.50 |

8. தொலைபேசிக் கம்பம்/என்டனா கம்பம் கட்டமைத்தல் உயரம் 5 மீற்றர் -20 மீற்றர் வரை ரூ. 20,000.00 மற்றும் அதிகரிக்கும் ஒவ்வொரு மீற்றருக்கும் ரூ. 100.00 படி

| | | |
|---|---|---|
| 9. | காணியினை துண்டிடுவதற்கான விண்ணப்பப்படிவம் | ரூ. 1000.00 |
| 10. | உண்டியல் படுத்தப்படாத காசோலைக்கான கட்டணம் | ரூ.100.00 |
| 11. | திட்டப் பத்திரத்தை அனுமதிப்பதற்கான கட்டணம் | ரூ.500.00 |
| 12. | வரிப்பணம் அட்டவணையில் பிரதியை பெற்றுக் கொள்ளல், சொத்திற்கு பெறுமதி அட்டவணைக்காக | ரூ.500.00 |
| 13. | வரிப்பணம் செலுத்துவதில்லை என்று சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக | ரூ.100.00 |
| 14. | காணாமற்போன சான்றிதழ்களின் பிரதியிற்காக | ரூ.200.00 |
| 15. | ஆபத்துடைய மரம் ஒன்றினை அகற்றுவற்கான விண்ணப்பப்படிவம் ஒன்றிற்காக | ரூ.300.00 |
| 16. | நீர் பவுசர்களை வாடகைக்கு வழங்குவதற்கான கட்டணம் | |
| (I) | நிலையான கட்டணம் | ரூ. 2100.00 |
| (II) | அதிகரிக்கும் ஒவ்வொரு பவுசருக்காகவும் | ரூ. 700.00 |
| (III) | நீர் கொண்டு சென்று வழங்குவதற்கான கட்டணம் 1 கிலோ மீற்றருக்கு (சென்று வருவதற்காக) | ரூ. 360.00 |
| 17. | சேதப் பசளை (கொம்போஸ்ட் பசளை) ஒரு கிலோவிற்காக | ரூ. 15.00 |
| 18. | கொடிக் கம்பத்திற்கான கட்டணம் | |
| | 12 மணி அல்லது 12 மணித்தியாலத்திற்கு குறைந்த காலத்திற்காக | ரூ.40.00 |
| | 12 மணிக்கு மேற்பட்ட 24 மணித்தியாலத்திற்கு குறைந்த காலத்திற்காக | ரூ.60.00 |
| | ஒரு கொடிக் கம்பத்திற்காக வைப்புத் தொகை | ரூ.200.00 |
| 19. | சபைக்குரிய அலவ்வ பேரூந்து தரிப்பிடத்திற்கு உட்பிரவேசிக்கின்ற எல்லா பொது வாகன பேரூந்துகளினால் ஒரு தினத்திற்கு ஒரு தடவை மாத்திரம் அறவிடப்படும் கட்டணம் | ரூ.50.00 |
| 20. | குளாய்களை இடுவதற்காக பாதையினை பழுதுபடுத்துவதற்கான கட்டணம் | |
| | தார் இடப்பட்ட பாதை (சதுர அடியிற்காக) | ரூ.500.00 |
| | கொன்கிறீட் இடப்பட்ட பாதை (சதுர அடியிற்காக) | ரூ.400.00 |
| | கெரவல் இடப்பட்ட பாதை (சதுர அடியிற்காக) | ரூ.100.00 |
| | கெரவல் இடப்பட்ட பாதையில் பக்க வெட்டை வெட்டுவதற்காக (சதுர அடியிற்காக) | ரூ.100.00 |
| 21. | கலி பௌசரிற்காக (மலசல கழிவுகள்) அறவிடப்படும் கட்டணம் | |
| | நிலையான கட்டணம் முதலாவது லோடிற்காக | ரூ.4000.00 |
| | அதிகரிக்கின்ற எல்லா லோட் ஒன்றிற்காகவும் | ரூ. 2100.00 |
| | சாரதி மற்றும் உதவியாளர் கொடுப்பனவு | ரூ.1000.00 |
| | போக்குவரத்து கட்டணம் கி. மீ. 01 இற்காக (சென்று வருவதற்கு) | ரூ.600.00 |

| | |
|---|---|
| 22. வாசிகசாலைகளுக்காக அறவிடப்படும் கட்டணம் | |
| வாசிகசாலை உறுப்புரிமைக்கான விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ.10.00 |
| வாசிகசாலை உறுப்புரிமைக் கட்டணம் | |
| சிறுவர்களுக்காக | ரூ.25.00 |
| வயதுவந்தவர்களுக்காக | ரூ.100.00 |
| வாசிகசாலை உறுப்புரிமையை ஆண்டு தோறும் புதுப்பிப்பதற்கான கட்டணம் : | |
| சிறுவர்களுக்காக | ரூ.25.00 |
| வயதுவந்தவர்களுக்காக | ரூ.50.00 |
| தாமதத்திற்கான தண்டனைக் கட்டணம் அறவிடல் | |
| 01. முதல் 30 ஒரு நாளுக்கு ஒரு புத்தகத்திற்கு | ரூ.2.00 வீதம் |
| 02. 31 முதல் 90 வரை ஒரு புத்தகத்துக்கு | ரூ. 80.00 |
| 03. 91 முதல் 180 வரை ஒரு புத்தகத்துக்கு | ரூ. 160.00 |
| 04. 180 நாளுக்கு மேற்படுகின்ற தினங்களுக்காக ஒரு புத்தகத்திற்கு | ரூ. 200.00 |
| 23. பிரதேச சபைக்கு உரிய அடக்கஸ்தளங்களில் பூதவுடலினை சமாதி கட்டுவதற்கான கட்டணம் - 1 சதுர அடிக்காக | ரூ.1000.00 |

09 - 336/8

---

## அலவ்வ பிரதேச சபை

(176 ஆம் அதிகாரம்) பிரசித்த நாடக கலை கட்டளைச் சட்டளைச் சட்டத்தின்
கீழ் விதிக்கப்படுகின்ற கட்டணம் - 2023

அலவ்வ பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டில் யூலை மாதம் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் போது 05-10 ஆம் தீர்மான இலக்கத்தின் படி கீழ் காணப்படும் தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது பற்றி பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட அக்காட்சி உரிமப்பத்திரக் கட்டணம், காட்சிப்படுத்துவதற்கு மூன்று நாட்களுக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

பத்மா வேத்தேவ,
தலைவர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2022, ஓகத்து 10.

### தீர்மானம்

(176 ஆம் அதிகாரம்) பிரசித்த நாடக கலை அதிகாரச் சட்டத்தின் (31) ஆம் பிரிவின் கீழ் பிதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் கட்டணம் அறவிடப்பட்டு காட்சிப்படுத்தப்படும் காட்சிகளுக்காக கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2023 ஆம் ஆண்டிற்கு விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் என்றும் அந்த அதிகாரப்பத்திரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியவர் காட்சி நடாத்துவதற்கு மூன்று நாட்களுக்கு முன் அலவ்வ பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என அலவ்வ பிரதேச சபை பிரேரணை விடுக்கின்றேன்.

### அட்டவணை

| | |
|---|---|
2023 ஆம் வருடத்துக்கென விதிக்கப்படும் குறித்த மதிப்பீட்டு வரியை மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்குள் நான்கு சமமான தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

2023 ஆம் வருடத்துக்குரிய மதிப்பீட்டு வரி முழுவதையும் 2023, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் மதிப்பீட்டு வரியின் முழுப் பெறுமதியின் பத்து சதவீதம் (10%) கழிவாகவும், ஒவ்வொரு காலாண்டுக்குமான உரிய மதிப்பீட்டு வரியைக் குறித்த காலாண்டின் முதலாவது மாதத்தின் கடைசித் திகதிக்கு முன்னர் பிரதேச சபையில் செலுத்தினால் நூற்றுக்கு ஐந்து (5%) சதவீதம் கழிவாகவும் வழங்கப்படும்.

எம். டபிள்யூ. அனுருத்த மடுகல்லே,
தவிசாளர்,
உடதும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
உடதும்பர,
2022, செத்தெம்பர் 12.

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்*

*(அ) 146 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் உடதும்பர பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் விருத்தியடைந்த பிரதேசங்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு அசையாத சொத்தின் மீதும் 2014 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டுத் தொகையை 2023 ஆம் ஆண்டின் பெறுமதியாக ஏற்றுக்கொள்வதற்கும்,*

*(ஆ) 134 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி உடதும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் விருத்தியடைந்த பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள அசையாச் சொத்து ஒவ்வொன்றின் மீதும் அதன் ஆண்டுப் பெறுமதியின் ஏழு சதவீதத்தை (7%) மதிப்பீட்டு வரியாக 2023 ஆம் ஆண்டில் விதித்து அறவிடுவதற்கும்,*

*மற்றும்*

*(இ) 134 ஆவது பிரிவின் (6) மற்றும் (7) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, குறித்த 2023 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டு வரியை 2023, மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்குள் சமமான தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துவதுடன், மதிப்பீட்டு வரி முழுவதையும் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் மதிப்பீட்டு வரியின் முழுப் பெறுமதியின் பத்து சதவீதம் (10%) கழிவாகவும், ஒவ்வொரு காலாண்டுக்குமான உரிய மதிப்பீட்டு வரியைக் குறித்த காலாண்டின் முதலாவது மாதத்தின் கடைசித் திகதிக்கு முன்னர் பிரதேச சபையில் செலுத்தினால் நூற்றுக்கு ஐந்து (5%) சதவீதம் கழிவாகவும் வழங்கப்படும் என விதிப்பதற்கு உடதும்புர பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*09 - 347/1*

---

**உடதும்பர - பிரதேச சபை**

*பயிர்ச்செய்கை வரி விதித்தல் - 2023*

*2022 ஓகத்து மாதம் 16 ஆந் திகதி நடாத்தப்பட்ட உடதும்பர பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் இ(viii) ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் பின்வரும் தீர்மானம் செயற்படுத்தப்படுமென்று இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தரப்படுகின்றது.*

*2020 ஆம் ஆண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள பயிர்ச்செய்கை வரியைக் குறித்த வருடத்தின் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் நான்கு சமமான தவணைக் கட்டணங்களில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென மேலும் தெரிவிக்கப்படுகின்றது.*

*2023 ஆம் வருடத்துக்குரிய பயிர்ச்செய்கை வரி முழுவதையும் 2021 சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் முழுப் பெறுமதியின் பத்து சதவீதம் (10%) கழிவாகவும், ஒவ்வொரு காலாண்டுக்குமான உரிய பயிர்ச்செய்கை வரியைக் குறித்த காலாண்டின் முதலாவது மாதத்தின் கடைசித் திகதிக்கு முன்னர் பிரதேச சபையில் செலுத்தினால் நூற்றுக்கு ஐந்து (5%) சதவீதம் கழிவாகவும் வழங்கப்படும்.*

எம். டபிள்யூ. அனுருத்த மடுகல்லே,
தவிசாளர்,
உடதும்பர பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,*
*உடதும்பர,*
*2022, செத்தெம்பர் 12.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்-*

*(அ) 146 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் துணை நியமங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி உடதும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள பயிர்ச்செய்கை வரிக்கு உட்படும் ஒவ்வொரு காணிக்கும் 2022 ஆம் வருடத்தில் செயலிலிருந்த கணிப்பீட்டை 2023 ஆம் வருடக் கணிப்பீடாக ஏற்றுக்கொள்வதெனவும்,*

*(ஆ) 134 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறித்த உப பிரிவின் முதலாவது துணை விதியின் கீழ் 1989.02.03 ஆந் திகதி கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நியமத்தின்படி பயிர்ச்செய்கை வரியை விதித்து அறவிடும் கருமங்களுக்கென உள்ளூராட்சி அமைச்சரால் விசேட பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு ஹெக்டயாரை விடக் குறையாத, ஆனால் ஐந்து ஹெக்டயாரை விடக் குறைந்த ஒவ்வொரு காணியின் மீதும் ரூபா ஐம்பது (50.00) வீதம் ஆண்டுக்கான பயிர்ச்செய்கை வரியையும், ஐந்து ஹெக்டயார் அல்லது அதற்கு மேலுள்ள ஒவ்வொரு காணிக்கும் எனக் குறித்த காணியின் ஒவ்வொரு ஹெக்டயார் மீதும் ரூ. 10.00 வீதம் 2023 ஆம் ஆண்டுக்கான பயிர்ச்செய்கை வரியை விதித்து அறவிடுவதற்கும்,*

*மற்றும்*

*(இ) 134 ஆவது பிரிவின் (6) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறித்த வரிக்கு உட்படுபவர் அதனை 2023 ஆம் ஆண்டின் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடியும் 04 சமமான தவணைக் கட்டணங்களில் செலுத்துவதற்கு விதித்தல் வேணடுமெனவும் உடதும்பர பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*09 - 347/2*

---

**உடதும்பர பிரதேச சபை**

*ஏதும் வர்த்தகங்களுக்கான துணை விதிகளின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் மீது கட்டணங்கள் விதித்தல் - 2023*

*2022 ஒகத்து மாதம் 16 ஆம் திகதி நடத்தப்பட்ட உடதும்பர பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் இ(ix) ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.*

*இதற்கமைய ஏதும் துணைவிதிகளின் கீழ் உடதும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் ஏதும் தொழில்களை நடத்திச் செல்வதற்கென 2023 ஆம் வருடத்தில் உடதும்பர பிரதேச சபை வழங்கும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தின் மீதும் கட்டணமொன்று அறவிடப்படும் என்பது இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

*எம். டபிள்யூ. அனுருத்த மடுகல்லே,*
*தவிசாளர்,*
*உடதும்பர பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*உடதும்பர,*
*2022 செத்தெம்பர் 12.*

**தீர்மானம்**

*(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கக்கூடிய 147 ஆவது (1) ஆவது உப பிரிவின் (ஆ) பந்தியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி உடதும்பர பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நடாத்தப்படும் பின்வரும் அட்டவணையின் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் தொழில் முயற்சிகள் தொடர்பில் அதனை நடத்திச் செல்லும் இடத்தின் வருடாந்தப் பெறுமதியின் நிரல் II இல் காட்டப்பட்டுள்ளதன் அடிப்படையில் 2023 ஆம் வருடத்துக்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விதித்து அறவிடுவதற்கும்,*

(ஆ) குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகம் இலங்கை சுற்றுலா சபையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது அதன் மூலம் அங்கீகரிககப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹோட்டல், தங்குமிட வசதி கொண்ட ஹோட்டல் அல்லது தங்குமிடமாக இருப்பின், அவ்வாறான ஹோட்டல், தங்குமிட வசதிகொண்ட ஹோட்டல் அல்லது தங்குமிடத்தின் கடந்த வருடத்தின் பெறுகைகளின் ஒரு சதவீத (1%) அனுமதிப்பத்திரக் கட்டணத்தை 2023 ஆம் ஆண்டில் விதித்து அறவிடுவதற்கும்,

(இ) 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியளவில் இருந்த ஏதும் வர்த்தகங்கள் தொடர்பில் குறித்த கட்டணத்தை 2023 ஏப்பிரல் மாதம் முதலாம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வர்த்தகத்தை நடத்திச் செல்பவர் பிரதேச சபையில் செலுத்திவிடுதல் வேண்டுமென விதிப்பதற்கும்,

(ஈ) 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும் ஏதும் வர்த்தகங்கள் தொடர்பில் குறித்த கட்டணத்தை ஆரம்பித்த 03 மாதங்களுக்குள் வர்த்தகத்தை நடத்திச் செல்பவர் பிரதேச சபையில் செலுத்திவிடுதல் வேண்டுமென விதிப்பதற்கும் உடதும்பர பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

அனுமதிப்பத்திரக் கட்டணம் - 149 ஆம் பிரிவு

| தொ. இல. | நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 1. | பேக்கரி | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | தேநீர்க்கடை | 500.00 | 500.00 | 1,000.00 |
| 3. | உணவு விடுதி | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | ஹோட்டல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | தங்குமிடங்கள் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | இறைச்சி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | மீன் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | குளிரூட்டிய இறைச்சி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | பாற்பண்ணை நடத்துதலும் பால் விற்பனையும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | நடமாடும் வர்த்தகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | சிகையலங்கார நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | அழகுக்கலை நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | பட்டறை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | பித்தளைப் பொருட்கள் செய்யுமிடமும் விற்பனையும் | 500.00 | 600.00 | 1,000.00 |
| 15. | ஐரோப்பிய மருந்து விற்பனை நிலையம் (பாமசி) | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | மருத்துவ இரசாயன ஆய்வுகூட வசதி வழங்குதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | திரவ வாயு விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | பண்டிகைக் காலங்களில் மாடு அறுவைக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் - ஒரு விலங்குக்கு | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. | பாணி, கருப்பட்டி தயாரிப்பு செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 20. | கறிச்சரக்கு, உலர் உணவுகள் மற்றும் மா வகைகளைப் பைக்கற் செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 21. | கராஜ் வேலைத்தளம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 22. | விழாக் காலங்களில் விசேட வியாபாரம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 23. | தேயிலைத் தூள் பொதியிடல், களஞ்சியம் செய்தல், விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 24. | காளான் செய்கையும் விற்பனையும் | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| | முதலாவது அட்டவணை - அருவருப்பான வர்த்தகங்கள் | | | |
| 1. | பசளை அல்லது இரசாயனப் பசளை தயாரிப்பு அல்லது களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | தோல் பதனிடுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 3. | தோல் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 4. | விலாங்கு வளர்ப்பு (இறைச்சி, பால் அல்லது முட்டைக்காக) | 500.00 | 750.00 | 1000.00 |
| 5. | புகைப்படக் கலையகம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 6. | மிருக வைத்திய நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 7. | விற்பனைக்கென இலகுவில் பழுதடையக்கூடிய உணவுகளையும் உணவுப் பொருட்களையும் களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 8. | 150 கிலோகிராமுக்கும் அதிகமாகக் கருவாடு, உப்புமீன், ஜாடி வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 9. | சிரட்டைக்கரி அல்லது மரக்கரி தயாரிப்பு மற்றும் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | புகையிலை பதனிடும் அல்லது களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | மிருக உணவுகள் தயாரிப்பு அல்லது மிருக உணவுக் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | புண்ணாக்கு உற்பத்தி அல்லது 200 Kg அதிகமாக களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | சவர்க்கார உற்பத்தி நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | மிருக உ எலும்புகளை அரைத்தல் அல்லது வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | புதிய அல்லது பழைய உலோகங்கள் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. | உலோகக் கழிவுகள் சேகரித்தல் அல்லது களஞ்சியம் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | தளபாடங்கள் தயாரிப்பு அல்லது களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. | பிரம்புப் பொருட்களது தயாரிப்பு நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | தச்சுத்தொழிற்சாலை நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | பழப்பாகு அல்லது பழரசப் பானம் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | இனிப்புப் பண்டங்களது தயாரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | தேங்காய் மட்டை அவிய வைத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 23. | துரிகை வகைகளது தயாரிப்பு (பற்துரிகை தவிர்ந்த) | 500.00 | 750.00 | 1000.00 |
| 24. | பற்தூரிகை தயாரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 25. | கள் சேகரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 26. | வினாகிரி தயாரித்தல் அல்லது களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 27. | பொறிமுறையினால் அல்லது கையினால் மரம் அரியும் நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 28. | 100 லீற்றருக்கு அதிகமாகப் பெயின்ட், வார்ணிஷ் அல்லது டிஸ்டெம்பர் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 29. | சோடா உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 30. | தோற்பொருட்கள் தயாரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 31. | பழவகை, மீன் அல்லது ஏனைய உணவுவகைகளைத் தகரத்தில் அடைத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 32. | மிளகாய், கோப்பி, தானியங்கள், அவரையினம் அல்லது கறிச்சரக்குப் பொருட்கள் அல்லது மா அரைக்கும் ஆலை நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 33. | மெழுகுதிரி தயாரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 34. | கற்பூர உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 35. | எழுத்து மை, அச்சு மை அல்லது ஸ்ரென்சில் மை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 36. | ஆடை துவைக்கும் நீலம் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 37. | அரக்கு தயாரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 38. | வாசனைத் திரவியங்கள் தயாரிப்பு அல்லது களஞ்சியம் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 39. | பாடசாலை வெண்கட்டி உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 40. | 50 இற்கு மேற்பட்ட டயர், ரியூப் களஞ்சியம் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 41. | டயர், மீள நிரப்புதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 42. | டயர், டியூப் வொல்கனைசுப் படுத்தும் நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 43. | 1000 கிலோகிராமுக்கு அதிகமான சிமெந்துக் களறுஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 44. | சிமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பெஸ்டோ சிமெந்துப் பொருட்கள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 45. | பிளாத்திக் பொருட்கள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 46. | பொறிமுறை நெசவு நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 47. | பசளை, சுண்ணாம்பு, மா அல்லது ஏனைய பொருட்கள் இடப்பட்ட பைகளைச் சுத்தப்படுத்தி விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 48. | பொறிமுறையிலான சீமெந்து அச்சுக்கல் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 49. | 250 கிலோகிராமுக்கு அதிகமான தானியங்கள் அல்லது அவரையினக் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |

இரண்டாவது அட்டவணை - அபாயகரமான வர்த்தகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மொத்த விற்பனைக்காக 750 கிலோகிராமுக்கு அதிகமாக மாவு, வெங்காயம் அல்லது சீனி களஞ்சியம் செய்து வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 2. | தைத்த ஆடைகள் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 3. | அச்சகம் ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 4. | 50 பறவைகளுக்கு அதிகமான கோழிப் பண்ணை அல்லது கோழிக் கொட்டில் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 5. | 10 விலங்குகளுக்கும் அதிகமான ஆடுகள், பன்றிகள் பண்ணை நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 6. | செங்கல் அல்லது ஓட்டுக் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 7. | விறகுக் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 8. | பொறிமுறையில் அல்லது கையினால் கருங்கல் உடைத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 9. | குளிர்பான உற்பத்தி அல்லது 100 போத்தல்களுக்கும் அதிகமான களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | ஐஸ்கிறீம் தயாரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | தேங்காயெண்ணெய் தயாரித்தல் அல்லது 300 லீற்றருக்கும் அதிகமாக வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச. | 751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 12. | தீப்பெட்டி உற்பத்தி அல்லது 100 டசினுக்கும் அதிகமான களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | தும்பு அல்லது ஏனைய நார் வகைகைளால் பொருட்கள் தயாரிப்பு மற்றும் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | பாவித்த ஆடைகளின் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | தங்கநகை தயாரிப்பு அல்லது திருத்தவேலை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. | பொறிமுறையில் மரம் அரிதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | இயந்திரங்களைப் பயன்படுத்தும் பட்டறை நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. | வெற்றுப் போத்தல், வெற்றுச் சாக்கு களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | மிதிவண்டி அல்லது மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | பாவித்த பேப்பர் அல்லரது கடதாசிக் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | விசிறல் பெயின்ட் செய்யுமிடம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | வாணவேடிக்கை அல்லது பட்டாசு தயாரிப்பு அல்லது களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 23. | தேங்காயெண்ணெய் தவிர்ந்த ஏனைய எண்ணெய் வகைகள் 50 லீற்றருக்கு அதிகம் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 24. | குளிரூட்டிய இறைச்சி அல்லது மீன் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 25. | அரிமரக் களஞ்சியம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |

மூன்றாவது அட்டவணை - அருவருப்பான மற்றும் அபாயகரமான வர்த்தகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இரசாயனங்களைப் பயன்படுத்திக் கறுவா, கராம்பு, ஏலக்காய் வகைகளைக் களஞ்சியப்படுத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 2. | உலர்சலவை செய்தல் அல்லது சாயமூட்டுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 3. | துணி அச்சிடுதல் அல்லது சாயமூட்டுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 4. | மின் முலாம் பூசும் நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 5. | சுண்ணக்கல் அல்லது பரல் கற்கள் எரியூட்டுதல் அல்லது நீற்றுச் சுண்ணம் களஞ்சியம் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 6. | பற்றரி மின்னேற்றும் அல்லது திருத்தும் நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 7. | மோட்டார் வாகனம் திருத்துமிடம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 8. | மோட்டார் வாகனம் சர்விஸ் செய்யுமிடம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 9. | வார்ப்புப் பட்டறை நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | தகர வேலைத்தலம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | திரவ வாயுக்கொள்கலன் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | ஆயுர்வேத, தேசிய மருந்துகள் தயாரிப்பு நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | கண்ணாடிப் பொருட்கள் அல்லது கண்ணாடித் தகடு களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | பிளாத்திக் அல்லது கண்ணாடியிழைப் பொருளுற்பத்தி சார்ந்த நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | 100 கிலோகிராமுக்கு மேற்பட்ட தேயிலைத்தூள் களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 16. | காய்ச்சி ஒட்டும் வேல்டிங் நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | கடைசல் பட்டறையுடனான வேலைத்தலம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. | பெற்றோல், தீசல், எண்ணெய் அல்லது ஏனைய கணிய எண்ணெய்களது களஞ்சியம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | விவசாய இரசாயப் பொருட்களது உற்பத்தியும் களஞ்சியமும் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | வளி சீராக்கி, குளிரூட்டி அல்லது அதிகுளிரூட்டி திருத்தம் அல்லது சர்விஸ் செய்யும் நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | மின்சாரத் தொழிலகம் அல்லது மின் உபகரணங்களது உற்பத்தி, திருத்தம் செய்யும் நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | பால் குளிரூட்டும் நிலையம் நடத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |

09 - 347/3

---

**உடதும்பர பிரதேச சபை**

கைத்தொழில் வரி விதித்தல் - 2023

2022, ஒகத்து மாதம் 16 ஆம் திகதி நடத்தப்பட்ட உடதும்பர பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் இ(X) ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.

2023 ஆம் வருடத்துக்கென விதிக்கப்படும் குறித்த வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பான வரியை அந்த வருடத்தின் மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்திவிடுமாறு மேலும் அறிவிக்கப்படுகின்றது.

எம். டபிள்யு. அனுருத்த மடுகல்லே,
தவிசாளர்,
உடதும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
உடதும்பர,
2022, செத்தெம்பர் 12.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் உடதும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நடத்திச் செல்லப்படும் அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்படப்படுள்ள வர்த்தகங்கள் தொடர்பில், ஒவ்வொரு வர்த்தகத்துக்குமென அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வர்த்தகத்தையும் நடத்திச் செல்லும் இடத்தின் வருடாந்தப் பெறுமதிக்கேற்ற குறிப்பிட்ட வரித்தொகையை 2023 ஆம் ஆண்டுக்கென விதித்து அறவிடுவதெனவும், குறித்த வரிக்கு உரித்துடையவர் அவற்றை 2023 ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்திவிடுதல் வேண்டுமெனவும் உடதும்பர பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | காய்கறி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | பழவகை வியாபாரம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | வெற்றிலை, பாக்கு வியாபாரம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | சில்லறைக்கடை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | கனிய எண்ணெய் சில்லறை விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | வாகன உதிரிப்பாக விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | மின்னுபகரணங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | நடமாடும் தொலைபேசி, உதிரிப்பாக விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | தொலைபேசி முற்கொடுப்பனவு விற்பனை, ரீலோட் செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | கசெற் நாடா, குறுந்தகடு வாடகையும் விற்பனையும் | 500.00 | 700.00 | 1,000.00 |
| 11. | ஸ்ரிக்கர் ஒட்டுதலும் படம் பிரேம் செய்தலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | கட்டடப் பொருட்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | சுண்ணாம்பு விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | பூச்சுமை பெயின்ட் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 15. | மட்பாண்ட உற்பத்தியும் விற்பனையும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | பாதணி தோல்பொருள் உற்பத்தியும் விற்பனையும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | கைவினைக் கைத்தொழில் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | கைத்தறி நெசவு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. | சில்லறைத் துணி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 20. | சாப்புச் சமான்கள் (வாசனைத் திரவியங்கள், வண்ணப்பொருட்கள்) விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 21. | அலுமினியம் பிளாத்திக் பாண்டங்கள் சமையல் உபகரணங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 22. | விளையாட்டு உபகரணங்கள் விற்பனை நிலையம் | 300.00 | 750.00 | 1,000.00 |
| 23. | புத்தக நிலையம் காகிதாதிகள் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 24. | பத்திரிகைகள் சஞ்சிகைகள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 25. | லொத்தர் சீட்டு விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 26. | பழைய இரும்பு, பிளாத்திக், காட்போட் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 27. | வெற்றுப் போத்தல் சேகரிக்கும் களஞ்சியம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 28. | வண்ணக் கன்றுகள், ஏனைய கன்றுகள் நாற்றுமேடையும் விற்பனையும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 29. | செல்லப் பிராணிகள், வண்ணமீன்கள் இனப் பெருக்கமும் விலங்குணவு விற்பனையும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 30. | ஆயுர்வேத மருந்துப் பொருள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 31. | பூசைப் பொருட்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 32. | தரை ஓடுகள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 33. | பிளாத்திக் /மெழுகுச்சீலை | 500.00 | 750.00 | 1,000.00 |

09 - 347/4

**உடதும்பர பிரதேச சபை**

*வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பான வரி விதித்தல் - 2023*

*2022, ஒகத்து மாதம் 16 ஆம் திகதி நடாத்தப்பட்ட உடதும்பர பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் இ (xi) ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.*

*2023 ஆம் வருடத்துக்கென விதிக்கப்படும் குறித்த வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பான வரியை அந்த வருடத்தின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்திவிடுமாறு மேலும் அறிவிக்கப்படுகின்றது.*

எம். டபிள்யூ. அனுருத்த மடுகல்லே,
*தவிசாளர்,*
*உடதும்பர பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*உடதும்பர,*
*2022, செத்தெம்பர் 12.*

***தீர்மானம்***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆவது பிரிவின், (1) ஆவது உப பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், உடதும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் இங்கு அட்டவணையில் முதலாவது பிரிவில் தரப்பட்டுள்ள ஏதும் தொழில்களை 2023 ஆம் ஆண்டில் நடத்திச் செல்லும் ஒவ்வொருவரும் குறித்த வர்த்தகத்தில் முன்னைய ஆண்டின் பெறுகைகளின்மீது நிரல் 1 இல் காட்டப்பட்டுள்ள எல்லைக்குள் நடத்திச் செல்லப்படும் சந்தர்ப்பத்தில் அதன் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குச் சமமான வியாபார வரியொன்றை விதித்து அறவிடுவதற்கும், குறித்த வரிக்கு உட்படுபவர் அவ்வரியை 2023 ஆம் வருடம் ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் உட தும்பர பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்திவிட விதிக்குமாறும் உடதும்பர பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

***அட்டவணை***

*வர்த்தக வரி - 152 ஆம் பிரிவு*

***முதலாம் பகுதி***

**தொழில் முயற்சிகள்**

1. வங்கிகள்/வங்கி நடவடிக்கைகள்
2. வெளிநாட்டுக் குடிவகை விற்பனை நிலையங்கள்
3. உற்பத்தித் தொழிற்சாலைகள் (தைத்த ஆடைகள், தேயிலை)
4. மருத்துவ நிலையங்கள் /மருந்தகங்கள்
5. தொலைபேசிப் பரிவர்த்தனைக் கோபுரங்கள்
6. மணல் அகழ்வோர்
7. இரத்தினக்கல் வர்த்தகம்
8. நிதி முதலீட்டாளர்கள்
9. ஈடு பிடிப்போர்
10. ஒப்பந்தக்காரர்கள்
11. வழங்குநர்கள்
12. சாரதி பயிற்சி நிறுவனங்கள்
13. பிரதிநிதிகள் /பிரதிநிதி நிறுவனங்கள்
14. சுற்றுலா வழிகாட்டிகள்
15. மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகன வர்த்தகம்

16. கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி விற்பனையும்
17. தனியார் கல்வி வகுப்புக்களை நடாத்துதல்
18. கட்டுடற் பயிற்சி நிலையம்
19. இறுதிச்சடங்குச் சேவைகள் நடத்துவோர்
20. உற்சவ மண்டபங்கள் / உற்சவ உபகரணங்கள் வழங்குநர்
21. உற்சவங்களுக்காக உணவு வழங்குநர்
22. வீட்டு வரைபடம், மதிப்பீடு மற்றும் தோட்ட அலங்கார வடிவமைப்பு
23. நந்தவனம் அலங்காரம் செய்யும் நிலையம்
24. வீட்டு வரைபடக் கலைஞர்கள்
25. வாடகை வாகனச் சேவை நடாத்துதல்
26. போக்குவரத்துச் சேவை நடத்துவோர்
27. சுருட்டு அல்லது பீடி தயாரிப்பு நிலையம் நடாத்துதல்
28. தொடர்பாடல் தொடர்பான வர்த்தகம்
29. இணையத்தள வசதிகள் வழங்குவோர்
30. ஒலிபெருக்கி இயந்திரங்கள் வாடகைக்கு விடுதல்
31. மனிதவலு வழங்குவோர்
32. வாகனங்களில் வந்து வர்த்தகம் செய்வோர்
33. குத்தகை வழங்கும் நிலையம் நடாத்துவோர்
34. மண் அகழும் இயந்திரங்களை வாடகைக்கு விடும் நிலையம் நடாத்துதல்
35. தொழில் முகவர் நிலையம் நடாத்துதல்
36. இணைத்தளத்தின் ஊடாக வர்த்தகம் செய்தல்
37. துப்புரவு செய்யும் நிலையம் நடாத்துதல்
38. சோதிட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

2023 ஆம் ஆண்டுக்கான வியாபாரம் மற்றும் தொழில் வரிக்கு அமைய அனுமதிப்பத்திரக் கட்டண வரி, கைத்தொழில் வரி மற்றும் வியாபயாரம் மற்றும் தொழில் வரி என்பவற்றில் அடங்காத வியாபாரங்கள் அனைத்தும் வியாபாரம் மற்றும் தொழில் வரிக்கு உட்படும்.

**இரண்டாம் பகுதி**

| | நிரல் I<br>2022 ஆம் ஆண்டின் பெறுகைகள் | நிரல் II |
|---|---|---|
| 1. | ரூ. 6000 வரை | இல்லை |
| 2. | ரூ. 6000 இற்கு மேல் ரூ. 12000 இற்கு குறைய | 90.00 |
| 3. | ரூ. 12000 இற்கு மேல் ரூ. 18750 இற்கு குறைய | 180.00 |
| 4. | ரூ. 18750 இற்கு மேல் ரூ. 75000 இற்கு குறைய | 560.00 |
| 5. | ரூ. 75000 இற்கு மேல் ரூ. 150000 இற்கு குறைய | 1200.00 |
| 6. | ரூ. 150000 இற்கு மேல் | 3000.00 |

09 - 347/5

---

**உடதும்பர பிரதேச சபை**

வாகனங்களுக்கும் விலங்குகளுக்கமான வரி விதித்தல் - 2023

2022, ஒகத்து மாதம் 16 ஆம் திகதி நடாத்தப்பட்ட உடதும்பர பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் இ(xii) ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.

அதற்கமைய, உடதும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 2023 ஆம் வருடத்தில் ஏதும் வாகனங்களையோ அல்லது விலங்குகளையோ தம்முடன் வைத்திருக்கும் எவரும் அவை தமது பொறுப்பிலிருக்கும் முப்பது நாட்கள் கழிந்த உடனேயே இந்த வரியை உடதும்பர பிரதேச சபையில் செலுத்துதல் வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

எம். டபிள்யு. அனுருத்த மடுகல்லே,
தவிசாளர்,
உடதும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
உடதும்பர,
2022 செத்தெம்பர் 12.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 ஆவது பிரிவின் கீழ் உடதும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் பின்வரும் அளவுகளில் வாகனங்களுக்கும் விலங்குகளுக்குமான வரியொன்றை 2023 ஆம் ஆண்டில் விதித்து அறவிடுவது பொருத்தமென்று தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

| | I ஆம் நிரல் | II ஆம் நிரல்<br>செலுத்த வேண்டிய வரி<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | மோட்டார் வண்டி, மோட்டார் திராக்டர், மோட்டார் லொறி, மோட்டார் சைக்கிள், வண்டி, ஜின் ரிக்ஷோ, பைசிக்கிள் அல்லது ட்ரை சைக்கிள் அல்லாத ஏனைய ஒவ்வொரு வாகனத்துக்கும் | 25.00 |
| 2. | ஒவ்வொரு பைசிக்கிள் முச்சக்கர சைக்கிள் அல்லது பைசிக்கிள் கார்களுக்காக | |
| | I. வியாபார நோக்கத்துக்காக உபயோகிக்கப்படுமெனின் | 18.00 |
| | II. வியாபாபர நோக்கமல்லாத ஏனைய கருமங்களில் ஈடுபடுத்தப்படுமெனின் | 4.00 |
| 3. | ஒவ்வொரு வண்டிலுக்கும் | 20.00 |
| 4. | ஒவ்வொரு கைவண்டிலுக்கும் | 10.00 |
| 5. | ஒவ்வொரு ரிக்ஷோவுக்கும் | 7.00 |
| 6. | ஒவ்வொரு குதிரைக்கும், கோவேறு கழுதைக்கும் | 15.00 |
| 7. | ஒவ்வொரு கொம்பன் யானைக்கும் | 50.00 |

09 - 347/6

---

**உடதும்பர பிரதேச சபை**

விளம்பர அறிவித்தல்கள் /தரிசன சுற்றாடல் துணை விதிகளின் கீழ் கட்டணம் விதித்தல் - 2023

2022, ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடாத்தப்பட்ட உடதும்பர பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் இ(xiii) ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (1) ஆவது பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய குறித்த சட்டத்தின் கீழ், 2016.02.23 ஆந் திகதியையும் 1955/7 ஆம் இலக்கத்தையும் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை கௌரவ அமைச்சர் அவர்களால் அங்கீகரித்து வெளியிடப்பட்ட துணை விதிகளின் 13 ஆவது விளம்பர அறிவித்தல்கள் தரிசன சுற்றாடல் பற்றிய துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய உடதும்பர பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள வீதியில், பாதையில், நீரோடையில், குளத்தில் அல்லது வானில் புலப்படும் வண்ணம்

எவ்வகையிலும் காட்சிப்படுத்தச் செய்யும் அறிவித்தல் அல்லது வர்த்தக விளம்பரங்களுக்கெனப் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கட்டணமொன்றை 2023 ஆம் வருடத்தில் உடதும்பர பிரதேச சபையில் செலுத்துதல் வேண்டுமென மேலும் அறியத் தரப்படுகின்றது.

எம். டபிள்யூ. அனுருத்த மடுகல்லே,
தவிசாளர்,
உடதும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
உடதும்பர,
2022 செத்தெம்பர் 12.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (1) ஆவது பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய குறித்த சட்டத்தின் கீழ், 2016.02.23 ஆந் திகதியையும் 1955/7 ஆம் இலக்கத்தையும் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை கௌரவ அமைச்சர் அவர்களால் அங்கீகரித்து வெளியிடப்பட்ட துணை விதிகளில் 13 ஆவது விளம்பர அறிவித்தல்கள் தரிசன சுற்றாடல் பற்றிய துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய உடதும்பர பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள வீதியில், பாதையில், நீரோடையில், குளத்தில் அல்லது வானில் புலப்படும் வண்ணம் எவ்வகையிலும் காட்சிப்படுத்தல் செய்யும் அறிவித்தல் அல்லது வர்த்தக விளம்பரங்களுக்கெனப் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு வரித் தொகையொன்றையும் 10% முத்திரை வரியையும் 2023 ஆம் வருடத்தில் விதித்து அறவிடுவது பொருத்தமென உடதும்பர பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

| | I ஆம் நிரல் | II ஆம் நிரல்<br>செலுத்த வேண்டிய வரி<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | விளம்பர அறிவித்தலொன்றைப் பலகையொன்றில் பொருத்திக் காட்சிப்படுத்துவதற்கு ஒரு இடத்தில் அமைக்கப்படும் விளம்பரத்துக்கு ஒரு சதுர அடிக்கு ஒரு வருடத்துக்கு | 100.00 |
| 2. | ஒருவரால் சுமந்து செல்லப்படும் அல்லது பயணிக்கும் வாகனமொன்றில் பொருத்தப்படும் அல்லது பொதுமக்களது காட்சிக்குப் புலப்படும் இடத்தில் பொருத்தப்பட்டுள்ள விளம்பரம் அல்லது பதாதைக்கு ஒரு சதுர அடிக்கு ஒரு மாதத்துக்கு | 50.00 |
| 3. | நிருவாக எல்லைக்குள் வர்த்தக விளம்பரங்களுக்கென அமைக்கப்படும் நடமாடும் கூடத்துக்கு அல்லது நடமாடும் வாகனத்துக்குரிய கட்டணம் 04 மணி நேரத்துக்கு அதனைத் தாண்டும் ஒவ்வொரு 04 மணி நேரத்துக்கும் ரூபா 500.00 வீதம் | 1,000.00 |

09 - 347/ 7

---

## உடதும்பர பிரதேச சபை

நீர்க்கட்டணம் விதித்தல் - 2023

2022, ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடாத்தப்பட்ட உடதும்பர பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் இ(xiv) ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.

இதற்கமைய, உடதும்பர பிரதேச சபையின் மூலம் நிருவகிக்கப்படும் நீர் விநியோகத் திட்டங்களிலிருந்து நீரைப் பெறுவோரிடமிருந்து பின்வரும் வகையில் 2023 ஆம் வருடத்தில் ஒவ்வொரு மாதத்துக்குமென அறவிடப்படும் கட்டணங்களைப் பிரதேச சபையில் செலுத்துதல் வேண்டுமென மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

எம். டபிள்யூ. அனுருத்த மடுகல்லே,
தவிசாளர்,
உடதும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
உடதும்பர,
2022 செத்தெம்பர் 12.

## தீர்மானம்

உடதும்பர பிரதேச சபையின் மூலம் நிருவகிக்கப்படும் நீர் விநியோகத் திட்டங்களிலிருந்து விநியோகிக்கப்படும் நீருக்கென 2023 ஆம் வருடத்தில் பின்வருமாறு கட்டணங்களை செலுத்துதல் வேண்டுமென அறிவிக்கப்படுகின்றது.

1. நீர்மானி பொருத்தப்பட்டுள்ள வழங்கல்களுக்கான மாதாந்தக் கட்டணம்

| வதிவிடங்களுக்கென | | | வர்த்தக /தொழிற்சாலை நுகர்வு | | |
|---|---|---|---|---|---|
| அலகு | கட்டணம் | நிலையான கட்டணம் ரூபா | அலகு கன மீற்றர் | கட்டணம் ரூ. | நிலையான கட்டணம் ரூபா |
| 1 - 10 | 5.00 | 150.00 | 1 - 10 | 10.00 | 200.00 |
| 11 - 20 | 7.00 | 160.00 | 11 - 20 | 14.00 | 210.00 |
| 21 - 30 | 9.00 | 170.00 | 21 - 30 | 18.00 | 220.00 |
| 31 - 40 | 12.00 | 190.00 | 31 - 40 | 24.00 | 240.00 |
| 41 - 50 | 15.00 | 210.00 | 41 - 50 | 30.00 | 260.00 |
| 51 - 60 | 19.00 | 240.00 | 51 - 60 | 38.00 | 290.00 |
| 61 - 70 | 23.00 | 270.00 | 61 - 70 | 46.00 | 320.00 |
| 71 - 80 | 28.00 | 280.00 | 71 - 80 | 56.00 | 330.00 |
| 81 - 90 | 33.00 | 290.00 | 81 - 90 | 66.00 | 340.00 |
| 91 - 100 | 39.00 | 300.00 | 91 - 100 | 78.00 | 350.00 |
| 100 இற்கு மேல் | 45.00 | 310.00 | 100 இற்கு மேல் | 90.00 | 360.00 |

I. சமயத்தலங்களும் பாடசாலைகளும் நீர்க்கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

II. மருத்துவ மனைகளுக்கான தண்ணீர்க் கட்டணங்கள் வதிவிடத்துக்கான கட்டணங்காளாக அறவிடப்படும்.

III. பாடசாலைகளது குடிமனைகள், மருத்துவ மனைகளது குடிமனைகள், பிரதேச செயலாளரது பொறுப்பிலுள்ள குடிமனைகள் மற்றும் ஏனைய குடிமனைகள் அனைத்துக்குமென வதிவிடக் கட்டணங்களே அறவிடப்படும்.

2. நீர்மானி பொருத்தப்படாத வழங்கல்களுக்குரிய மாதாந்தக் கட்டணம்

I. வதிவிடங்கள் :

| | |
|---|---|
| 1/2" வழங்கலுக்கு | ரூ. 250.00 |
| 3/4" வழங்கலுக்கு | ரூ. 300.00 |
| 1" வழங்கலுக்கு | ரூ. 350.00 |

II. வதிவிடமல்லாதவை (வர்த்தக நிலையங்கள், அரச தாபனங்கள்) :

| | |
|---|---|
| 1/2" வழங்கலுக்கு | ரூ. 300.00 |
| 3/4" வழங்கலுக்கு | ரூ. 350.00 |
| 1" வழங்கலுக்கு | ரூ. 600.00 |

3. புதிய நீர் விநியோக இணைப்புக்கென வதிவிடங்களிலிருந்து ரூபா 4000.00 உம், வதிவிடங்கள் அல்லாத (வர்த்தக மற்றும் அரச நிறுவனங்கள்) இடங்களிலிருந்து ரூ. 7500.00 உம் வைப்புத் தொகையாக அறவிடப்படும்.

4. துண்டிக்கப்பட்ட நீர் வழங்கலை மீளளிக்கும் கட்டணம் ரூ. 1000.00

5. நீர்வழங்கலுடன் தொடர்பான நீர்க்குழாய்த் தொகுதி மற்றும் நீர்மானி என்பவற்றில் மேற்கொள்ளப்படும் சேதங்களுக்கும், கழற்றி அகற்றப்படும் பொருத்திகள் மீதும் ரூ. 5000.00 இற்கான தண்டப்பணமும் அத்துடன் சேதத்துக்கு உள்ளான பொருட்களது கணிப்பிடப்பட்ட பெறுமதியும் அறவிடப்படும்.

09 - 347/ 8

## உடதும்பர பிரதேச சபை

*சான்றிதழ்கள் வழங்குவதற்கான கட்டணங்கள் விதித்தல் - 2023*

*2022, ஓகத்து மாதம் 16 ஆம் திகதி நடத்தப்பட்ட உடதும்பர பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் இ(XV) ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி சான்றிதழ்கள் மீது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்களை 2023 ஆம் வருடத்துக்கென உடதும்பர பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென மேலும் தெரிவிக்கப்படுகின்றது.*

எம். டப்ளியு. அனுருத்த மடுகல்லே,
தவிசாளர்,
உடதும்பர பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
உடதும்பர,
2022 செத்தெம்பர் 12.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி வழங்கப்படும் சான்றிதழ்களுக்கெனப் பின்வரும் வகையில் 2023 ஆம் வருடத்தில் கட்டணங்களை விதித்து அறவிடுவது பொருத்தமென உடதும்பர பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

### அட்டவணை 01

### சான்றிதழ்கள் வழங்குவதற்கான கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் விதித்தல்

| | | |
|---|---|---|
| 1. | வீதிரேகைச் சான்றிதழ், கையேற்பில்லாத சான்றிதழ் கட்டணம் | ரூ. 2000.00 |
| 2. | கட்டட விண்ணப்பப் படிவம் | ரூ. 1000.00 |
| 3. | கட்டட விண்ணப்பப் படிவத்தை அங்கீகரிப்பதற்கான பரிசீலனைக் கட்டணம் (முன்பார்வைக் கட்டணம்) | |
| வதிவிடங்கள் | | |
| I. | 01 சதுர அடியிலிருந்து 600 வரை | ரூ. 1000.00 |
| II. | 601 சதுர அடியிலிருந்து 1000 வரை | ரூ. 1500.00 |
| III. | 1000 சதுர அடியைத் தாண்டும்போது ஒவ்வொரு சதுர அடிக்கும் ரூ. 3.00 வீதம் | |
| வர்த்தக இடங்கள் | | |
| I. | 01 சதுர அடியிலிருந்து 600 வரை | ரூ. 2000.00 |
| II. | 601 சதுர அடியிலிருந்து 1000 வரை | ரூ. 3000.00 |
| III. | 1000 சதுர அடியைத் தாண்டும்போது ஒவ்வொரு சதுர அடிக்கும் ரூ. 4.00 வீதம் | |
| IV. | பரிவர்த்தனைக் கோபுரக் கட்டட விண்ணப்பப்படிவம் அங்கீகரிக்கும்போது அல்லது தகவுச் சான்றிதழ் வழங்கும்போது இரண்டில் ஒரு சந்தர்ப்பத்தில் | ரூ. 100000.00 |
| 4. | கட்டட நிருமாணம் தொடர்பில் எல்லை/மதில்/பாதுகாப்புச் சுவர்களுக்கான முற்கட்டணம் | |
| I. | கட்டட எல்லைக்கு வெளியில் - வதிவிடம் 1 மீற்றர் நீளத்துக்கு | ரூ. 60.00 |
| II. | கட்டட எல்லைக்கு வெளியில் - வர்த்தக மற்றும் ஏனையவை | ரூ. 150.00 |
| III. | கட்டட எல்லைக்குள் - வதிவிடம் 1 மீற்றர் நீளத்துக்கு | ரூ. 75.00 |
| IV. | கட்டட எல்லைக்குள் - வர்த்தக மற்றும் ஏனையவை I மீற்றர் நீளத்துக்கு | ரூ. 200.00 |

5. கட்டட வரைபடத்தை அங்கீகரிக்கும்போது முற்கட்டணம் அறவிடுதல்
   I. அத்திவாரம் வரையுள்ள நிருமாணங்களுக்கு முற்கட்டணத்தின் இருமடங்கு
   II. கூரை மட்டம் வரை சுவர்கள் கட்டப்பட்டுள்ள இடங்களுக்கு சதுர அடிக்கான முன் கட்டணத்தின் மும்மடங்கு
   III. கூரை முடிக்கப்பட்டுள்ள இடங்களுக்கென முற்கட்டணத்தின் ஐந்து மடங்கு என்ற வகையில், (சில மாடிகளைக் கொண்டுள்ள கட்டடத்தில் முதலாம் மாடியின் கூரை அமைக்கப்பட்டிருப்பின் கட்டடம் முழுமையாக உள்ளதாகக் கருதப்படும்)

| | | |
|---|---|---|
| 06. | கட்டட விண்ணப்ப படிவத்தின் காலத்தை நீடிப்பதற்காக ஒரு வருடக் கட்டணம் | ரூ. 2000.00 |
| 07. | தகவுச் சான்றிதழுக்காக | |
| | வதிவிடங்களுக்கென | |
| | I. 1000 சதுர அடிக்குக் குறைவாக | ரூ. 500.00 |
| | II. 1000 சதுர அடிக்கு மேலாக | ரூ. 1000.00 |
| | III. 1000 சதுர அடியைத் தாண்டும்போது ஒவ்வொரு சதுர அடிக்கும் ரூ. 1.00 வீதம் | |
| | வர்த்தக நிலையங்களுக்கென | |
| | I. 1000 சதுர அடிக்குக் குறைவாக | ரூ. 500.00 |
| | II. 1000 சதுர அடிக்கு மேலாக | ரூ. 1000.00 |
| | III. 1000 சதுர அடியைத் தாண்டும்போது ஒவ்வொரு சதுர அடிக்கும் ரூ. 3.00 வீதம் | |
| 08. | வரைபடத்தை அங்கீகரித்தல் சான்றிதழ் | ரூ. 1,500.00 |
| 09. | சுற்றாடல் சான்றிதழ் விண்ணப்பப்படிவம் | ரூ. 500.00 |
| 10. | சுற்றாடல் சான்றிதழைப் புதுப்பிக்கும் விண்ணப்பப்படிவம் | ரூ. 250.00 |
| 11. | சுற்றாடல் சான்றிதழ் பரிசீலனைக் கட்டணம் | |
| | I. முதலீடு 250,000 அல்லது அதற்குக் குறைவாயின் | ரூ. 1000.00 |
| | II. முதலீடு 250,001 முதல் 500,000 வரை | ரூ. 3750.00 |
| | III. முதலீடு 500,001 முதல் 1,000,000 வரை | ரூ. 5000.00 |
| | IV. முதலீடு 1,000,000 இற்கு மேல் | ரூ. 10000.00 |
| | (அ) இதற்கு மேலதிகமாக வற் வரியும் அறவிடப்படும் | |
| 12. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (3 வருட காலத்துக்கு) | ரூ. 4500.00 |
| 13. | கூட்டெருப் பசளை - 1 கிலோ கிராம் | ரூ. 20.00 |
| 14. | கொங்கிறீட் தர நிருணயப் பரிசோதனைக் கட்டணம் - ஒரு அலகுக்கு | ரூ. 750.00 |
| 15. | உடதும்பர நகரின் பொது மலகூடங்களைப் பயன்படுத்தும் கட்டண அறவீடு (தலைக்கு) | ரூ. 20.00 |
| 16. | சொத்துரிமையைக் கைமாற்றம் செய்யும் கட்டணம் | ரூ. 500.00 |
| 17. | மதிப்பீட்டு வரிப் பட்டியலில் பெயர் மாற்ற விண்ணப்பப் படிவம் | ரூ. 250.00 |
| 18. | மதிப்பீட்டு வரிப் பதிவேட்டின் பிரதியெடுப்பதற்கு ஒரு சொத்துக்கு ஒரு பதிவேட்டுக்கு | ரூ. 200.00 |
| 19. | காணாமற்போன சான்றிதழ்களது பிரதியெடுப்பதற்கு ஒரு சொத்துக்கு, ஒரு பதிவேட்டுக்கு | ரூ. 200.00 |
| 20. | காணியைத் துண்டாடும் விண்ணப்பப் படிவம் | ரூ. 3000.00 |
| 21. | விளம்பர அறிவித்தல் பலகை விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ.500.00 |
| 22. | நூல் நிலைய அங்கத்தவ விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ. 50.00 |

*23. நூல் நிலைய அங்கத்துவக் கட்டணம்*

| | | |
|---|---|---|
| I. | *05 முதல் 15 வயது வரை (பிள்ளைகள்)* | *ரூ. 50.00* |
| II. | *15 முதல் 20 வயது வரை - மாணவர்* | *ரூ. 100.00* |
| III. | *20 வயதுக்கு மேற்பட்ட வளர்ந்தோர்* | *ரூ. 200.00* |

*24. நூலக அங்கத்தவர் உறுப்புரிமையைப் புதுப்பிக்கும் கட்டணம்*

| | |
|---|---|
| *1. பிள்ளைகள்* | *ரூ. 50.00* |
| *2. வளர்ந்தோர்* | *ரூ. 100.00* |

*25. காணாமற்போன புத்தகங்களுக்கென புத்தகத்தின் தற்காலப் பெறுமதியுடன் புத்தக விலையின் 25% வீதம்*

| | |
|---|---|
| *ஒரு புத்தகத்துக்கான ஒரு நாள் தாமதக் கட்டணம்* | *ரூ. 2.00* |

### *அட்டவணை 02*

### *உடதும்பர பிரதேச சபையின் திஸ்ஸ அத்தநாயக்க மாநாட்டு மண்டபம், உண்ணஸ்கிரிய பல்கருமக் கட்டடம், நகரசபை கடை அறைகளது மேடை மற்றும் ஏனைய கட்டடங்களை வாடகைக்கு விடுதல்*

***01. மாநாட்டு மண்டபம் /உண்ணஸ்கிரிய பல்கருமக் கட்டடத்தை வாடகைக்கு விடுதல்***

***(I) மாநாட்டு மண்டபத்தை வாடகைக்கு விடுதல்***

| | |
|---|---|
| *முதல் 4 மணி நேரத்துக்கு* | *ரூ. 1000.00* |
| *மேலதிக ஒவ்வொரு மணி நேரத்துக்கும்* | *ரூ. 250.00* |
| *8 மணி நேரத்தின் பின்னரான ஒவ்வொரு மணி நேரத்துக்கும்* | *ரூ. 500.00* |
| *வைப்புத் தொகை* | *ரூ. 2000.00* |

***(II) விசேட வைபவங்களுக்கென***

| | |
|---|---|
| *முதல் 8 மணி நேரத்துக்கு* | *ரூ. 8000.00* |
| *மேலதிக ஒவ்வொரு மணி நேரத்துக்கும்* | *ரூ. 1200.00* |
| *வைப்புத் தொகை* | *ரூ. 5000.00* |

***(III) அரச தாபனங்களுக்கென***

| | |
|---|---|
| *முதல் 8 மணி நேரத்துக்கு* | *ரூ. 1000.00* |
| *மேலதிக ஒவ்வொரு மணி நேரத்துக்கும்* | *ரூ. 200.00* |

***02. நகரின் கடை அறைகளின் மேடையை வாடகைக்கு விடுதல்***

| | |
|---|---|
| *முதல் 8 மணி நேரத்துக்கு* | *ரூ. 1000.00* |
| *மேலதிக ஒவ்வொரு மணி நேரத்துக்கும்* | *ரூ. 200.00* |
| *வைப்புத் தொகை* | *ரூ. 1000.00* |

***03. சபைக்குச் சொந்தமான உபகரணங்களை வாடகைக்கு விடுதல்***

*பிளாத்திக் கதிரைகளை வாடகைக்கு விடும்போது*

| | | |
|---|---|---|
| *(I)* | *நாளொன்றில் ஒரு கதிரைக்கு* | *ரூ. 15.00* |
| *(II)* | *வைப்புத் தொகை* | *ரூ. 1500.00* |

10 X 20 அடி கூடாரங்களை வாடகைக்கு விடும்போது

| | |
|---|---|
| (I) நாளொன்றில் | ரூ. 2000.00 |
| (II) மேலதிக ஒவ்வொரு நாளைக்கும் | ரூ. 500.00 |
| (III) வைப்புத் தொகை | ரூ. 2000.00 |

கொடிக் கம்பங்களை வாடகைக்கு விடும்போது

| | |
|---|---|
| (I) நாளொன்றில் ஒரு கம்பத்துக்கு | ரூ. 10.00 |
| (II) வைப்புத் தொகை | ரூ. 1500.00 |

**அட்டவணை 03**

**வாகனங்களை வாடகைக்கு விடுதல்**

**01. பவுசர் மூலம் நீர் விநியோகம் செய்தல்**

| | |
|---|---|
| (I) புண்ணிய கருமங்களுக்கு /மரணச் சடங்குகளுக்கு | ரூ. 500.00 |
| (II) ஏனைய கருமங்களுக்கு | ரூ. 1000.00 |
| (III) இரவு தரித்திருப்பதற்கானது | ரூ. 500.00 |

இதற்கு மேலதிகமாக பயணக் கட்டணமாக திராக்டர் மணி நேரத்துக்கு ரூ. 750.00 வீதம் அறவிடப்படும்.

02. பெக்கோ லோடர்
03. ரோட் ரோலர்
04. பொப்கெட் இயந்திரம்
05. திராக்டர் கியூப் 0.75
06. டிப்பர் வண்டி என்பவை

மாவட்ட விலைக்கேற்ற கட்டணம் அறவிடப்படும்.

09 -347/9

---

**உடதும்பர பிரதேச சபை**

வாடகை வாகனத் தரிப்பிடங்களில் வாடகை வாகனங்களைப் பதிவு செய்தல் - 2023

